## 11 - வது தமிழ் புத்தகம் வினா - விடை அடிப்படையில் தயாரிக்கப்பட்டது :

1) 'அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே' - என்ற பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? = தாயுமானவர் பாடல்கள்

2) தாயுமானவர் பாடல்கள் - என்னும் நூலின் நூல் அமைப்பு யாது? = 36 தலைப்பு + 56 பிரிவுகள் + 1452 பாடல்கள்

3) தாயுமானவர் பாடல்கள் - என்ற நூலின் சிறப்பு பெயர் யாது? = தமிழ் மொழியின் உபநிடதம்

4) தாயுமானவர் பாடல்கள் வலியுறுத்தும் நெறி எது? = இறைநெறி

5) தாயுமானவர் பிறந்த ஊர் யாது? = வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காடு

6) திருமறைக்காடு எனும் ஊர் அமைந்துள்ள மாவட்டம் எது? = நாமக்கல் மாவட்டம்

7) தாயுமானவரின் பெற்றோர் பெயர்கள் யாது? = கேடிலியப்ப பிள்ளை மற்றும் கெஜவல்லி அம்மையார்

8) தாயுமானவரின் தந்தையார் யாரிடம் கணக்கராக பணிபுரிந்தார்? = விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அவர்களிடம்

9) விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அவர்கள் ஆண்ட பகுதி எது? = திருச்சிராப்பள்ளி

10) தாயுமானவர் ஆற்றிய பணி யாது? = அரசுக்கணக்கர்

11) தாயுமானவர் யாரிடம் கணக்கராக பணிபுரிந்தார்? = விஜயரங்க சொக்கநாத நாயக்கர் மற்றும் அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராக பணிபுரிந்தார்

12) தாயுமானவரின் மனைவி பெயர் யாது? = மட்டுவார் குழலி

13) தாயுமானவர் அவர்கள் யாரிடம் உபதேசம் பெற்று துறவறம் பூண்டார்? = மௌனகுரு

14) மௌனகுரு என்பவர் யார் மரபில் வந்த துறவி ஆவார்? = திருமூலர் மரபில் வந்த துறவி

15) மௌனகுரு அவர்கள் இருந்த ஊர் எது? = திருச்சிராப்பள்ளி

16) தாயுமானவர் துறவு பூண்ட ஆண்டு எது? = 1736

17) தாயுமானவர் முக்தி பெற்ற இடம் எது? = இலட்சுமிபுரம்

18) இலட்சுமிபுரம் அமைந்துள்ள தமிழ்நாட்டின் மாவட்டம் எது? = இராமநாதபுரம்

19) தாயுமானவர் வாழ்ந்த காலம் எது? = கி.பி 18 ஆம் நூற்றாண்டு


Download more study materials visit www.tnpsctamil.in 1 of 45.

20) வள்ளலார் மற்றும் பாரதியார் ஆகியோர் எளிய கவிதைகள் பாட முன்னோடியாக இருந்தவர் யார்? = தாயுமானவர்

21) தன் எளிய பாடல்கள் மூலம் தமிழ்ச்சமயக் கவிதைக்கு ஒரு தூணாக இருந்தவர் யார்? = தாயுமானவர்

22) தாயுமானவர் பாடல்கள் - என்னும் நூலில் எத்தனை பாடல்கள் கண்ணிகளாகவும், வெண்பாக்களாகவும் அமைந்துள்ளன? = 771 பாடல்கள் கண்ணிகளாகவும் + 83 பாடல்கள் வெண்பாக்களாகவும் உள்ளன

23) தாயுமானவர் பாடல்கள் - என்னும் நூலில் மிகவும் புகழுடன் விளங்கும் தலைப்பு எது? = பராபரக்கண்ணி

24) தாயுமானவர் எழுதிய வரிகளில் புகழ் பெற்ற வரி எது? = 'எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே'

25) யாருடைய பாடல்களில் உவமைகளும் பழமொழிகளும் மிகுந்து காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது? = தாயுமானவர் பாடல்களில்

26) வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக் - என்ற பாடலை இயற்றியவர் யார்? = பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளை

27) பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் பிறந்த ஊர் எது? = பள்ளியகரம்

28) பள்ளியகரம் என்ற ஊர் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகின்றது? = பள்ளியக்கிரகாரம்

29) பள்ளியக்கிரகாரம் என்ற ஊர் அமைந்துள்ள மாவட்டம் எது? = தஞ்சை

30) பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளைகளின் பிறப்பு - இறப்பு யாது? = 1898 - 1977

31) பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்களின் பெற்றோர் யார்? = நீலமேகம் பிள்ளை மற்றும் சௌந்தரவல்லி அம்மையார்

32) பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் தாமே முயன்று படித்து கற்ற மொழிகள் எது? = ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், வடமொழி

33) எந்த ஆங்கிலேய கவிஞர் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்றை தமிழில் இரங்கற்பா என்னும் தலைப்பில் பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தார்? = தாமஸ்கிரே

34) 'திருநி றைந்தனை தன்னிக ரொன்றில்லை' - என்ற பாடல் எந்த பாடலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்? = வந்தே மாதரம் என்ற பாடலின் மொழிப்பெயர்ப்பு

35) வந்தே மாதரம் என்னும் பாடலை பாடியவர் யார்? = பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 2 of 45.

36) பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் அவர்கள் வந்தே மாதரம் எனும் பாடலை எந்த மொழியில் பாடினார்? = வங்காள மொழி

37) பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் அவர்கள் எழுதிய வந்தே மாதரம் எனும் பாடல்கள் அனைத்தும் பாரதியார் அவர்கள் தமிழில் எந்த பெயரில் பகுத்து மொழி பெயர்த்தார்? = தேசீய கீதங்கள்

38) தேசியகவி என்று போற்றப்படும் புலவர் யார்? = பாரதியார்

39) பாரதியார் பிறந்த ஊர் எது? = எட்டயபுரம் - தூத்துக்குடி மாவட்டம்

40) பாரதியார் பிறந்த போது எட்டயபுரம் ஊர் எந்த மாவட்டத்தை சார்ந்ததாக இருந்தது? = திருநெல்வேலி மாவட்டம்

41) பாரதியாரின் பெற்றோர்கள் யார்? = சின்னசாமி - இலக்குமி அம்மாள்

42) பாரதியாரின் இயற்பெயர் யாது? = சுப்ரமணியன்

43) பாரதியார் ஆசிரியராக பணியாற்றிய இடம் எது? = மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி

44) பாரதியார் அவர்கள் எத்தனை மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார்? = 3 திங்கள்

45) நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடியாக திகழ்ந்த புலவர் யார்? = பாரதியார்

46) தன் எழுத்துக்களின் மூலமாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர் யார்? = பாரதியார்

47) பாரதியாருக்கு 'பாரதி' என்ற பட்டத்தை அளித்தவர் யார்? = எட்டப்ப நாயக்கர் மன்னர்

48) பாரதியாருக்கு பாரதி என்ற பட்டத்தை எதற்காக வழங்கப்பட்டது? = இளமையில் அவர் கவித்திறமையை பாராட்டி கொடுக்கப்பட்டது

49) பாரதியாரின் ஆன்மீக குரு யார்? = விவேகானந்தரின் சிஷ்யை சகோதரி நிவேதித்தா

50) பாரதியாரின் அரசியல் குரு யார்? = திலகர்

51) பாரதியார் - செல்லம்மாள் திருமணம் நடந்த ஆண்டு எது? = 1897

52) பாரதியார் அவர்கள் காசி சென்ற ஆண்டு எது? = 1898 - 1902

53) பாரதியார் அவர்கள் காசிக்கு சென்று வந்தபின் எத்தனை ஆண்டுகள் பாட்டு எழுதாமல் இருந்தார்? = ஏழு ஆண்டுகள்

54) பாரதியார் மதுரையில் இருக்கும் போது எழுதிய பாடல்கள் எந்த இதழில் வெளியாகின? = விவேகபானு

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 3 of 45.

55) பாரதியாரின் பாடல்கள் எந்த ஆண்டு விவேகபானு இதழில் வெளியானது? = 1904

56) பாரதியார் எந்த எந்த மொழிகளில் புலமை பெற்று விளங்கினார்? = ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காள மொழி, பிரான்சியம்

57) நமக்கு தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் - என்று கூறிய புலவர் யார்? = பாரதியார்

58) பாரதியாரின் எந்த இதழை ஆங்கிலேயர் தடை செய்தனர்? = இந்தியா

59) ஆங்கிலேய அரசு இந்தியா என்ற இதழை தடைசெய்ததால் அந்த இதழ் வெளியினா இடம் எது? = புதுச்சேரி

60) ‘வந்தேமாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குவதும் என்போம்’ - என்று பாடியவர் யார்? = பாரதியார்

61) வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர்செய்யும் நதிநீர் இணைப்புத் திட்டத்தை விடுதலைக்கு முன்பே கண்டவர் யார்? = பாரதியார்

62) பாரதியார் மற்றும் அவர் பணியாற்றிய இதழ்களையும் கூறுக :

| பாரதியார் பணியாற்றிய நாளிதழ் | பணியாற்றிய ஆண்டு | பணியாற்றிய பணி |
|---|---|---|
| சுதேசிமித்திரன் | 1904 - 1906 மற்றும் 1920 aug - 1920 sep வரை | உதவி ஆசிரியர் |
| சக்கரவர்த்தினி (மகளிர் மாத இதழ்) | 1905 - 1906 | ஆசிரியர் |
| இந்தியா (வார இதழ்) | மே 1905 - செப் 1906 வரை | ஆசிரியர் |
| புதுச்சேரி | 1908 - 1910 | ஆசிரியர் |
| சூரியோதயம் | 1910 | ஆசிரியர் |
| கர்மயோகி | 1909 - 1910 | ஆசிரியர் |
| தர்மம் | 1910 | ஆசிரியர் |
| பாலபாரத யங் இண்டியா | | ஆசிரியர் |

63) புதுக் கவிதை என புகழப்படும், பாமரரும் கேட்டுணரும் வசன கவிதையைத் தமிழுக்குத் தந்த புலவர் யார்? = பாரதியார்

64) கேலிச்சித்திரம் எனப்படும் வரையும் முறையை தமிழுக்கு முதலில் தந்த புலவர் யார்? = பாரதியார்

65) சாதம் படைக்க மட்டுமல்லாது தெய்வச் சாதிபடைக்கவும் பெண்கள் தகுதிபடைத்தவர்கள் என்று கூறியவர் யார்? = பாரதியார்

66) ‘யாமறிந்த மொழ்களிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்’ - என்று கவிதை பாடிய கவிஞர் யார்? = பாரதியார்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 4 of 45.

67) பாரதியார் அவர்களின் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் எது? = 1882 - 1921

68) பாரதியாரின் வேறு பெயர்கள் சிலவற்றைக் கூறுக? = சாவித்திரி என்ற நிருபநேயர், காளிதாசன், ஓர் உத்தம தேசபிமாணி, சக்திதாசன்

69) பாரதியாரின் முதல் உரைநடைக்காவியம் எது? = ஞானரதம் (1908)

70) பாரதியார் எந்த நூலை மொழிபெயர்த்து வெளியிட்டார்? = பகவத்கீதை

71) பாரதியார் அவர்கள் உரை விளக்கம் தந்த நூல் எது? = பதஞ்சலி யோக சூத்திரம்

72) பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் வந்தே மாதரம், பகவத்கீதை ஆகிய நூல்களை பாரதியார் எந்த இதழில் மொழி பெயர்த்தார்? = சக்கரவர்த்தினி

73) பாட்டுக்கொரு புலவன் பாரதி என்று பாரதியை புகழ்ந்த கவிஞர் யார்? = கவிமணி

74) பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறும் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களுக்கு இலக்கியமாய் திகழும் நூல் எது? = எட்டுத்தொகை நூல்கள்

75) அகமும் புறமும் கலந்த எட்டுத்தொகை நூல் எது? = பரிபாடல்

76) புறநானூற்று பாடலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது? = 400 பாடல்கள்

77) புறநானூற்று பாடல்கள் அனைத்தும் எந்த வகை பாக்களால் ஆனது? = அகவற்பாக்களால் ஆனது

78) புறநானூற்று பாடலின் அடிவரையறை எது? = 4 முதல் 40 அடிவரை

79) புறநானூற்று பாடல்களை பாடிய புலவர்கள் மொத்தம் எத்தனை பேர்? = 160 பேர்

80) புறநானூற்று பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்? = ஜி.யு.போப்

81) ஜி.யு.போப் அவர்கள் எந்த ஆண்டு புறநானூற்று நூலில் உள்ள சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்? = 1900

82) புறநானூற்று தொகுதியின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்? = பாரதம் பாடிய பெருந்தேவனார்

83) முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச்சங்கப் புலவர்கள் எனப் பலருடைய வரலாற்றுக் குறிப்புகளை குறிப்பிடும் நூல் எது? = புறநானூறு

84) ‘உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு

85) ‘அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்’ - என்று பாடிய புலவர் யார்? = பரணர்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

86) வரலாற்றுக் குறிப்புகளைப் பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்ல புலவர் யார்? = பரணர்

87) பரணர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்து பாடிக் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனிடம் எவற்றை பரிசாகப் பெற்றார்? = உம்பறகாட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றார்

88) கான மஞ்சைக்குக் கலிங்கம் நல்கிய புகழுக்குரிய மன்னர் யார்? = பேகன்

89) பேகன் என்ற குறுநில மன்னனின் ஊர் எது? = நல்லூர்

90) ஒரு மன்னது புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறும் புறப்பொருள் திணை எது? = பாடாண் திணை

91) பாடாண் திணையின் நோக்கம் யாது? = ஆண்மகனது ஒழுகலாற்றைக் கூறுவது

92) ஒரு வேந்தன் எதிர்சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழப்படும் துறை எது? = இயன்மொழித் துறை

93) அகநானூறு நூலில் உள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை? = 400 பாடல்கள்

94) அகநானூறு நூல் எத்தனை பிரிவுகளைக் கொண்டது? = 3 பிரிவுகள் - அவை -

1) களிற்றியானை - 120 பாடல்கள்
2) மணிமிடைபவளம் - 180 பாடல்கள்
3) நித்திலக்கோவை - 100 பாடல்கள்

95) அகநானூறு பாடல்களின் அடிவரையறை யாது? = 13 அடி சிறுமையும் 31 அடி பெருமையும் கொண்டது

96) அகநானூற்று நூலின் வேறு பெயர் யாது? = நெடுந்தொகை

97) அகநானூற்று பாடலை தொகுத்தவர் யார்? = மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர்

98) அகநானூற்று பாடலை தொகுப்பித்தவர் யார்? = பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

99) 'ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = அகநானூறு

100) 'ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த' - என்ற வரியைப் பாடிய புலவர் யார்? = ஔவையார்

101) ஔவையார் எந்த குறுநில மன்னனுடன் ஆழ்ந்த நட்பைக் கொண்டிருந்தார்? = அதியமான்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 6 of 45.

102) அகநானூற்று நூலின் சிறப்பு வைப்பு முறை பற்றிக் கூறுக :

| பாடல்கள் தொடங்கும் எண்கள் | திணை வகை | திணையில் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1, 3, 5 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | பாலைத்திணை | 200 பாடல்கள் |
| 2, 8 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | குறிஞ்சித்திணை | 80 பாடல்கள் |
| 4, 14 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | முல்லைத்திணை | 40 பாடல்கள் |
| 6, 16 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | மருதத்திணை | 40 பாடல்கள் |
| 10, 20 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | நெய்தல்திணை | 40 பாடல்கள் |

103) ஔவையார் பாடிய பாடல்கள் காணப்படும் வேறு நூல்களைக் கூறுக? = புறநானூறு, நற்றிணை (2 பாடல்கள்), குறுந்தொகை (8 பாடல்கள்), திருவள்ளுவ மாலை (1 பாடல்கள்), அகநானூறு (2 பாடல்கள்)

104) தன் கணவனைத் தேடி அலைந்த சங்ககால பெண் புலவர் யார்? = வெள்ளிவீதியார்

105) வெள்ளிவீதியார் என்ற பெண்புலவருக்கு முன் தன் கணவனைத் தேடி அலைந்த பெண் யார்? = காரிகாலன் மகள் ஆதிமந்தி

106) வெள்ளிவீதியார் தன் கணவனைத் தேடியலைந்த செய்தியை நமக்கு பாடலாக கூறிய புலவர் யார்? = ஔவையார்

107) ஔவையார் அவர்கள் வெள்ளிவீதியார் தன் கணவனைத் தேடியலைந்த செய்தியை எந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்? = குறுந்தொகை

108) வெள்ளிவீதியார் தன் கணவனைத் தேடியலைந்த செய்தியைக் ஔவையார் கூறும் வரி எது? = 'காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வளிழந்தனவே'

109) ஐங்குறுநூறு என்ற பாடலின் அடிவரையறை யாது? = 3 அடிச் சிறுமையும் 6 அடி பெருமையும் கொண்டது

110) ஐங்குறுநூறு நூலினை தொகுத்தவர் யார்? = புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

111) ஐங்குறுநூறு நூலினை தொகுப்பித்தவர் யார்? = கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமான்

112) ஐங்குறுநூறு நூலின் கடவுள் வாழ்த்து பாடலை பாடியவர் யார்? = பாரதம் பாடிய பெருந்தேவனார்

113) 'எரிமருள் வேங்கை யிருந்த தோகை' - என்ற வரிப் பாடலை பாடியவர் யார்? = கபிலர்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 7 of 45.

114) ஐங்குறுநூறு நூலின் திணை வைப்பு முறை யாது :

| திணை வகை | பாடிய புலவர்கள் |
|---|---|
| மருதம் | ஓரம்போகியார் |
| நெய்தல் | அம்மூவனார் |
| குறிஞ்சி | கபிலர் |
| பாலை | ஓதலாந்தையார் |
| முல்லை | பேயனார் |

115) எந்த மன்னனின் அவைக்களப் புலவராக கபிலர் திகழ்ந்தார்? = பாரி மன்னன்

116) 'புலனழுக் கற்ற அந்தணாளன்' - என்று புகழப்பட்ட கவிஞர் யார்? = கபிலர்

117) கபிலரை 'வாய்மொழிக் கபிலன்' எனப் பாராட்டியவர் யார்? = நக்கீரர்

118) 'நல்லிசைக் கபிலன்' என்று கபிலரை பாராட்டியவர் யார்? = பெருங்குன்றூர்கிழார்

119) கபிலரை 'வெறுத்த வேள்வி விளங்கு புகழ்க் கபிலன் என்று பாராட்டிய புலவர் யார்? = இளங்கீரனார்

120) கபிலரை 'புலனழுக்கற்ற அந்தணாளன் பொய்யா நாவிற் கபிலன்' என்று பாராட்டியவர் யார்? = மறோக்கத்து நப்பசலையார்

121) கபிலர் பிறந்த ஊர் எது? = திருவாதவூர்

122) கபிலர் இயற்றிய பாடல்கள் யாது? = ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணைப்பாடல்கள் மற்றும் பதிற்றுபத்தில் ஏழாம்பத்து மற்றும் கலித்தொகையில் குறிஞ்சிக்கலியில் 29 பாடல்கள் முதலியன பாடியுள்ளார்

123) 'எரிமருள் வேங்கை யிருந்த தோகை' - என்ற வரி பாடலை கபிலர் எந்த பத்தில் பாடியுள்ளார்? = மஞ்ஞைப்பத்து

124) தோழி தலைவனின் பெற்றோரை வாழ்த்தி பாடுவது எவ்வாறு அழைக்கப்படுகின்றது? = பழந்தோர்ப் பழிச்சொல்

125) வெளிப்படையாகத் தெரியும் பொருளோடு பிறிது பொருள் புலப்படுமாறு அமைக்கும் உத்தியை எவ்வாறு அழைக்கின்றனர்? = உள்ளுறை

126) கூறவந்த பொருள் வெளிப்படாது மறைவாக இருக்க, அதனை உணர்ந்த வேறொரு பொருள் வெளிப்படையாக நிற்கும் உத்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது? = இறைச்சி

127) 'தமிழ்மாதின் இனிய உயிர்நிலை' - என்று உலகோரால் பாராட்டப்பட்ட நூல் எது? = திருக்குறள்

128) திருக்குறள் என்னும் நூலின் சிறப்பு யாது? = அடையடுத்த கருவியாகு பெயர்



Download more study materials visit www.tnpsctamil.in 8 of 45.

திருமுருகன் B.E

129) திருக்குறளை போற்றி ஔவையார் பாராட்டிய வரி எது? = அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டில் குறுகத் தறித்த குறள்'

130) திருக்குறள் நூலின் நூல் அமைப்பு :

| பால் வகை | இயல்கள் | அதிகாரம் | இடம்பெற்ற இயல்கள் | மொத்த அதிகாரங்கள் | மொத்த குறள்கள் |
|---|---|---|---|---|---|
| அறத்துப்பால் | 4 | 38 | பாயிரவியல் இல்லறவியல், துறவியல், ஊழியல் | 133 அதிகாரங்கள் | 1330 குறள்கள் |
| பொருட்பால் | 3 | 70 | அரசியல், அங்கவியல் | | |
| காமத்துப்பால் | 2 | 25 | களவியல், கற்பியல் | | |

131) திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றி பழந்தமிழ்ப் புலவர்கள் பாராட்டிப் பாடிய நூல் எது? = திருவள்ளுவ மாலை

132) திருக்குறளின் வேறு பெயர் யாது? = முப்பால், வாயுறை வாழ்த்து, உத்தரவேதம், பொய்யாமொழி

133) 'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே' - என்ற குறள் கூறும் அணி யாது? = வேற்றுமையணி

134) 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க' - என்ற குறள் கூறும் அணி யாது? = உவமை அணி

135) 'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை' - என்ற குறள் கூறும் அணி யாது? = எடுத்துக்காட்டு உவமையணி

136) 'பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்' - என்ற குறள் கூறும் அணி யாது? = பிறிது மொழிதல் அணி

137) 'நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்' - என்ற குறள் கூறும் அணி யாது? = பிறிது மொழிதல் அணி

138) சிந்தாமணி என்பதன் பொருள் யாது? = ஒளி குன்றாத மணி

139) சீவகசிந்தாமணி என்ற நூலை எழுதியவர் யார்? = திருதக்கதேவர்

140) திருத்தக்கதேவர் எழுதிய வேறு நூல் எது? = நரி விருத்தம்

141) திருத்தக்கதேவர் எந்த சமயத்தை சார்ந்த துறவி ஆவார்? = சமண சமயம்

142) சீவகசிந்தாமணி என்ற நூலின் வேறு பெயர் யாது? = மணநூல்



Download more study materials visit www.tnpsctamil.in 9 of 45.

143) சீவகன் யாரிடம் கல்வி கற்றார்? = அச்சணந்தி

144) சீவகன் எத்தனை ஆண்டுகள் தன் நாட்டை ஆண்டான்? = 30 ஆண்டுகள்

145) சீவகசிந்தாமணி எனும் நூல் எத்தனை இலம்பகங்களைக் கொண்டுள்ளது? = 13 இலம்பகங்கள் (நாமகள் இலம்பகம் முதல் முக்தியிலம்பகம் ஈறாகப் பதிமூன்று இலம்பகங்கள்)

146) விருத்தம் எனும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க் காப்பியம் எது? = சீவகசிந்தாமணி

147) சீவகசிந்தாமணி எனும் நூலுக்கு உரை எழுதிய புலவர் யார்? = உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியார்

148) வெள்ளி மலையிலுள்ள வித்தியாதரர் வேந்தன் கலுழவேகன் என்பவரின் மகள் பெயர் யாது? = காந்தருவத்தை

149) வித்தியாதரர் வேந்தன் கலுழவேகன் என்பவர் எங்கு திருமணம் நடைபெறுவதாக நிமித்திகர் மூலம் அறிந்து கொண்டார்? = இராசமாபுரத்தில்

150) கலுழவேகன் தன் மகளை யாரிடம் ஒப்புவித்து இராசமாபுரத்திற்கு அனுப்பி வைத்தார்? = சீதத்தன் எனும் வணிகனின் மூலமாக

151) காந்தருவத்தையின் தோழி பெயர் யாது? = வீணாபதி

152) சீதத்தன் எனும் வணிகன் எந்தப் போரில் வெல்வோர் காந்தருவத்தை மணம் செய்து கொள்ளலாம் என்று இராசமாபுரத்தில் அறிவித்தார்? = யாழ் போட்டியில்

153) யாழ் போட்டியின் போது காந்தருவத்தை வாசிக்கும் போது எவைகள் மெய்மறந்து நின்றன? = கின்னர மிதுனங்கள்

154) யாழ் போட்டியில் எத்தனை நாட்கள் வரை காந்தருவத்தை எந்த மன்னரும் வெல்ல முடியவில்லை? = 6 நாள்கள்

155) சீவகன் யார் கையிலிருந்த நரம்பை வாங்கி யாழியில் கட்டினான்? = தன் தம்பி நபுலன்

156) தடங்கண்ணாள் - என்று ஆசிரியர் யாரைக் குறிப்பிடுகிறார்? = காந்தருவதத்தை

157) நெடுங்கண்ணாள் - என்று ஆசிரியர் யாரைக் குறிப்பிடுகிறார்? = வீணாபதி

158) நோய் நான்கு எனப்படுபவை யாது? = மிக்கவெயில், அதிக நீர், கடுங்காற்று, தண்ணென்றநிழல்

159) சீறா என்பதன் பொருள் யாது? = வாழ்க்கை

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 10 of 45.

160) சீறாப்புராணத்தின் நூல் அமைப்பு யாது? = 2 பாகம் + 3 பெரும் பிரிவு + 5027 விருத்தப்பாக்கள் கொண்டது

161) சீறாப்புராணத்தில் கூறப்படும் பெரும் பிரிவுகள் யாது? = விலாதத்துக் காண்டம், நுபுவ் வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம்

162) விலாதத்துக் காண்டத்தின் வேறு பெயர் யாது? = பிறப்பியற்காண்டம்

163) நுபுவத்துக் காண்டத்தின் வேறு பெயர் யாது? = செம் பொருட்காண்டம்

164) ஹிஜ்ரத்துக் காண்டத்தின் வேறு பெயர் யாது? = செலவியற் காண்டம்

165) நபிகள் நாயகத்தின் பிறப்பு மற்றும் இளமை நிகழ்வுகள் + அவரின் திருமணம் ஆகிய நிகழ்வுகள் எந்த காண்டத்தில் கூறப்பட்டுள்ளன? = விலாதத்துக் காண்டம்

166) வானவர் ஜிப்றாயில் மூலம் திருமறை நபிகள் பெருமானார்க்கு அருளியது + அதன் பின் மக்கத்தில் நடந்தவைகள் அனைத்தும் எந்த காண்டத்தில் கூறப்பட்டுள்ளன? = நுபுவத்துக் காண்டம்

167) மக்கத்தை விட்டு பெருமனார் மதீனம் சென்றது + தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்கள் ஆகியவை எந்த காண்டத்தில் கூறப்பட்டுள்ளன? = ஹிஜ்ரத்துக் காண்டம்

168) நபிகள் நாயகத்தின் திருவாழ்வு முழுமையும் பாடி முடித்த கவிஞர் யார்? = பனு அகமது மரைக்காயர்

169) பனு அகமது மரைக்காயர் எழுதிய நூல் எது? = சின்ன சீறா

170) சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்? = உமறுப்புலவர்

171) உமறுப்புலவரின் ஆசிரியர் பெயர் யாது? = எட்டயபுரம் கடிகை முத்துப் புலவர்

172) சீறாப்புராணத்தை எழுத உமறுப்புலவரிடம் வேண்டுகோள் வைத்தவர் யார்? = செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதி

173) சீறாப்புராண நூல் முற்றுப்பெறுவதற்கு முன்னரே வள்ளல் சீதக்காதி இறந்த பிறகு யாருடைய உதவியால் நூல் முற்றுப்பெற்றது? = அபுல் காசிம்

174) உமறுப்புலவர் இயற்றிய வேறு நூல் எது? = முதுமொழிமாலை

175) முதுமொழிமாலை என்ற நூலில் உள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை? = 80 பாக்கள்

176) நபிகள் நாயகம் பகைவர்களுக்கு தெரியாமல் எந்த மலைக்குகையில் தங்கி இருந்தார்? = தௌர் மலைக்குகை

177) தௌர் மலைக்குகையில் நபிகள் நாயகத்துக்கு துணைவராக இருந்தவர் யார்? = அபுபக்கர்

திரு பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 11 of 45.

178) சீறாப்புராண நூலில் முதற்பாகத்தில் எத்தனை படலங்கள் உள்ளன? = 44 படலங்கள்

179) சீறாப்புராண நூலில் இரண்டாம்பாகத்தில் எத்தனை படலங்கள் உள்ளன? = 47 படலங்கள்

180) முதற்பாகத்தில் அமைந்துள்ள பெரும் பிரிவுகள் யாது? = விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம்

181) விலாதத்துக் காண்டத்தில் மொத்தம் எத்தனை படலங்கள் உள்ளன? = 23 படலங்கள்

182) நுபவத்துக் காண்டத்தில் மொத்தம் எத்தனை படலங்கள் உள்ளன? = 21 படலங்கள்

183) இரண்டாம் பாகத்தில் காணப்படும் பெரும் பிரிவு எது? = ஹிஜ்ரத்துக் காண்டம்

184) ஹிஜ்ரத்துக் காண்டத்தில் காணப்படும் படலங்கள் மொத்தம் எத்தனை? = 47 படலங்கள்

185) பாடப்பகுதியை சேர்ந்த விடமீட்ட படலம் என்ற பகுதி எந்த காண்டத்தில் இடம் பெற்றுள்ளது? = ஹிஜ்ரத்துக் காண்டம்

186) நாடகத் தமிழ் நூல்களுள் தலையாய சிறப்புகளை உடையதாக விளங்கும் நூல் யாது? = மனோன்மணீயம்

187) நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்ற நூல் எது? = மனோன்மணீயம்

188) மனோன்மணீயம் என்ற நூல் யார் எழுதிய ஆங்கில நூலின் தழுவல் ஆகும்? = லிட்டன் பிரபு எழுதிய இரகசிய வழி என்ற நூலை தழுவி எழுதியது

189) நாடக நன்னூலின் மரபு யாது? = அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது

190) மனோன்மணீயம் நூலின் நூல் அமைப்பு யாது? = 5 அங்கம் + 20 காட்சிகள்

191) மனோன்மணீயம் என்ற நூலில் இடம்பெற்றுள்ள சிறுகதை எது? = சிவகாமி சரிதம்

192) மனோன்மணீயம் என்ற நூலினை இயற்றியவர் யார்? = பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை

193) பெ.சுந்தரம் பிள்ளை பிறந்த ஊர் எது? = கேரளா - ஆலப்புழை

194) பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் பேராசிரியாக பணிபுரிந்த இடம் எது? = திருவனந்தபுரம் அரசினர் கல்லூரி



Download more study materials visit www.tnpsctamil.in 12 of 45.

195) பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் எந்த பாடப்பகுதியின் பேராசிரியாக கல்லூரியில் பணியாற்றினார்? = தத்துவப்பாடம்

196) பெ.சுந்தரம் பிள்ளை அவர்களின் ஞானாசிரியர் யார்? = கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள்

197) பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய வேறு நூல்கள் சிலவற்றைக் கூறுக? = நூல் தொகை விளக்கம் (1888), திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி (1894) ஆகியவை

198) சென்னை மாகாணம் ராவ்பகதூர் என்ற பட்டத்தை யாருக்கு அருளியது? = பெ.சுந்தரம் பிள்ளை

199) எந்த ஆண்டு பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் தன் நூலான மனோன்மணீயத்தை வெளியிட்டார்? = 1891 ஆம் ஆண்டு

200) மனோன்மணியத்தில் இடம் பெற்றுள்ள இறைவணக்க பாடல் எது? = 'நீராரும் கடலுடுத்த நிலமடைந்தை கெழிலொழுகும்'

201) எந்த ஆண்டு தமிழக அரசு மனோன்மணியம் நூலில் உள்ள இறைவணக்க பாடலை தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலாக அறிவித்தது? = 1970

202) மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் யார்? = ஜீவகன்

203) ஜீவக மன்னனின் வஞ்சக அமைச்சன் யார்? = குடிலன்

204) அமைச்சர் குடிலன் புதியதாக கோட்டையமைத்த இடம் எது? = திருநெல்வேலி

205) ஜீவகனின் மகள் பெயர் யாது? = மனோன்மணி

206) மனோன்மணி தான் கனவின் போது எந்த நாட்டு மன்னனை கண்டு காதல் கொண்டாள்? = சேர நாட்டரசன் புருடோத்தமனை

207) சேர நாட்டரசன் புருடோத்தமனிடம் தூது சென்றவன் யார்? = குடிலனின் மகன் பலதேவன்

208) ஜீவகன் மன்னனின் குலகுரு யார்? = சுந்தர முனிவர்

209) ஜீவகன் பாண்டிய மன்னனுக்கு புதிய கோட்டையால் ஆபத்து என்று உணர்ந்த முனிவர் யார்? = சுந்தர முனிவர்

210) 'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா!' - என்று வியந்த கவிஞர் யார்? = பாரதியார்

211) பாரதியார் எந்த இரு இதழ்களை வெளியிட்டு கட்டுரைகளாலும், கருத்துப் படங்களாலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களைத் திணறச் செய்தார்? = இந்தியா, விஜயா



Download more study materials visit www.tnpsctamil.in 13 of 45.

212) பாரதியார் எழுதிய கவிதை நூல்கள் சிலவற்றைக் கூறுக? = பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ஆகியன

213) பாரதியார் எழுதிய உரைநடை நூல்கள் சிலவற்றைக் கூறுக? = ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு ஆகியவை

214) பாரதியாரின் வசன கவிதைகள் எந்த கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிட்டு பேசப்படுகின்றன? = வால்ட்விட்மன், கலீல் கிப்ரான்

215) 'நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்' - என்று பாடியவர் யார்? = பாரதியார்

216) பாரத நாடு பழம்பெரு நாடு நீரதன் புதல்வீர் இந்நினைவகற்றாதீர் - என்ற பாடலை பாடியவர் யார்? = பாரதியார்

217) ஆரிய பூமியில் நாரியரும் - என்ற வரிப்பாடலை பாடியவர் யார்? = பாரதியார்

218) கட்டுரைகளாலும் கருத்துப் படங்களாலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களை திணறச் செய்தவர்? = பாரதியார்

219) 'கானப்பறவை கலகலெனு ஓசையிலும் - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = பாரதியார்

220) நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன் - என்று பாடிய கவிஞர் யார்? = பாரதியார்

221) அதியமானின் தூதராக ஔவை சென்றதைக் கூறும் நூல் எது? = புறநானூறு

222) தூதின் இலக்கணம் கூறும் நூல் எது? = இலக்கண விளக்கம்

223) தூது இலக்கிய பாடல்கள் எந்த வகை பாக்களால் பாடப்பட வேண்டும் என்று இலக்கண விளக்க நூற்பா கூறுகிறது? = வெண்டளை விரவிய கலிவெண்பாவால்

224) அழகர் கிள்ளைவிடு தூது என்ற நூலின் ஆசிரியர் பெயர் யாது? = பலபட்டை சொக்கநாத புலவர்

225) அழகர் கிள்ளைவிடு தூதுவில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை யாது? = காப்பு வெண்பா ஒன்று + 239 கண்ணிகளை உடையது

226) பாட்டின் இரண்டடிகளை கண்ணி என்பர்

227) சொக்கநாத பிள்ளை மரபினர் செய்த வந்த பணி என்ன? = பலபட்டைக்கணக்கு என்னும் ஒருவகை பணி

228) பலபட்டை சொக்கநாத பிள்ளை இயற்றிய வேறு நூல்கள் சிலவற்றைக் கூறுக? = மதுரை மும்மணிக்கோவை, தென்றல் விடு தூது ஆகியவை

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 14 of 45.

229) அழகர் கிள்ளை விடு தூது என்ற நூலின் பாட்டுடைத் தலைவன் யார்? = திருமாலிருஞ்சோலை மலையில் கோவில் கொண்டிருக்கும் அழகர்

230) தூது இலக்கியத்தில் எவற்றைக் கொண்டு தூதுவாக அனுப்பினர் என்று கூறப்படுகிறது? = அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், மான், தமிழ் முதலியன

231) போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொண்டு வெற்றி கொண்ட வீரரைப் பாடுவதை பற்றி பாடும் நூல் எது? = பரணி சிற்றிலக்கியம்

232) ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மான வனுக்கு வகுப்பது பரணி - என்று கூறிய நூல் எது? = இலக்கண விளக்கம்

233) பரணி என்ற நாள் மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்று கூறியவர் யார்? = தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர்

234) தோற்றவர் பெயரில் வழங்கப்படும் நூல் எது? = பரணி

235) தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி நூல் எது? = கலிங்கத்துப்பரணி

236) வெற்றி பெற்றவர் பெயரில் அமைந்த பரணி நூல்கள் எது? = திராவிடத்து பரணி, புரட்சித் தலைவி பரணி

237) கலிங்கத்துப்பரணி என்ற நூல் எத்தனை தாழிசைகளை கொண்டது? = 509 தாழிசைகள்

238) கலிங்கத்துப்பரணி என்ற நூலை 'தென்தமிழ் தெய்வப்பரணி' - என்று பாராட்டியவர் யார்? = ஒட்டக்கூத்தர்

239) கலிங்கத்துப்பரணி என்ற நூலை இயற்றியவர் யார்? = செயங்கொண்டார்

240) எந்த மன்னரின் அவைக்கள புலவராக செயங்கொண்டார் இருந்தார்? = முதற் குலோத்துங்க சோழன்

241) 'பரணிக்கோர் செயங்கொண்டார்' - என்று செயங்கொண்டாரை புகழ்ந்து பாடிய புலவர் யார்? = பலபட்டை சொக்கநாத புலவர்

242) இன்று எந்த மாநிலம் பழைய காலத்தில் பண்டு கலிங்கம் என வழங்கப்பட்டு வந்தது? = ஒரிசா மாநிலம்

243) கலிங்க நாட்டின் மீது போர் செய்த படைத்தளபதி யார்? = கருணாகரத் தொண்டைமான்

244) கருணாகரத் தொண்டைமான் அவர்கள் எந்த மன்னனின் படைத்தளபதியாக இருந்தாவர்? = முதல் குலோத்துங்க சோழன்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 15 of 45.

245) கலிங்கத்துபரணி என்ற நூலில் வண்டையர் கோன் என ஆசியரால் அழைக்கப்படுபவர் யார்? = கருணாகரத் தொண்டைமான்

246) பிள்ளைத்தமிழின் இலக்கணம் யாது? = கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகப் பாவித்து அவர்தம் குழந்தை பருவத்தை பத்து பருவங்களாக பகுத்து கொண்டு பருவத்துக்கு பத்து ஆசிரிய விருத்தங்கள் அமையப் பாடுவது ஆகும்

247) பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்? = 2 வகை - ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்

248) ஆண்பால் பிள்ளைத்தமிழுக்கும், பெண்பால் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவான பருவங்கள் மொத்தம் எத்தனை? = 7 பருவங்கள்

249) ஆண்பால் பிள்ளைத்தமிழின் 10 பருவங்கள் எது? = காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியவை

250) பெண்பால் பிள்ளைத்தமிழின் 10 பருவங்கள் எது? = காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் ஆகியவை

251) முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் நூலை இயற்றியவர் யார்? = குமரகுருபரர்

252) குமரகுருபரர் பிறந்த ஊர் எது? = திருவைகுண்டம்

253) திருவைகுண்டம் எனற ஊர் அமைந்துள்ள நதிக்கரை எது? = தாமிரபரணி நதிக்கரை

254) குமரகுருபரர் எத்தனை வயது வரை பேச்சு திறனற்றவராக இருந்தார்? = 5 வயது வரை

255) குமரகுருபரர் எந்த இறைவனின் அருளால் பேசும் திறனை பெற்றார்? = திருச்செந்தூர் முருகன் அருளால்

256) குமரகுருபரர் இயற்றிய வேறு நூல்கள் யாது? = கந்தர் கலிவென்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், காசிக் கலம்பகம் ஆகியவை

257) பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் எது? = செங்கீரைப் பருவம்

258) பொருள் தெரியாத ஒலியைக் குழந்தை எழுப்பும் பருவத்தை குறிக்கும் பிள்ளைத்தமிழ் பருவம் எது? = செங்கீரைப் பருவம்

259) இளங்குழந்தை ங்க ங்க என்று கூறக்கேட்டுத்தாய் உகக்கும் பருவம் எது? = செங்கீரை பருவம்

260) தொட்டில் பிள்ளை தலையயுர்த்திக் கையால் ஊன்றி உடம்பை அசைத்தலைச் எவ்வாறு கூறப்படுகிறது? = செங்கீரையாடுதல்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

261) பெத்தலகேம் குறவஞ்சி என்ற நூலை எழுதியவர் யார்? = தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்

262) தொல்காப்பியனார் கூறும் வனப்பில் அடங்கும் சிற்றிலக்கியம் எது? = குறவஞ்சி

263) பெத்தலகேம் குறவஞ்சியின் தனிச்சிறப்பு யாது? = முற்றுருவகம்

264) பெத்தலகேம் குறவஞ்சியில் கூறப்பட்டுள்ள உருவகங்கள் யாது?

1) உலா வரும் மன்னர் - இயேசு பெருமான்

3) குறவஞ்சி - விசுவாசம்

2) தேவமோகினி - தலைவி சீயோன் மகள்

5) குரு - சிங்கன்

4) குறி கூறுதல் - தீர்க்க தரிசனம்

6) உபதேசி - நூவன்

7) பிடிக்கும் பறவைகள் - மக்கள்

8) வலை - இறைவாக்கு செய்தி

265) தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களின் ஆசிரியர் யார்? = சுவார்ட்ஸ் பாதிரியார்

266) சுவார்ட்ஸ் பாதிரியார் அவர்கள் மதபோதகராக இருந்த இடம் எது? = தஞ்சை

267) தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் சிறந்து விளங்கிய மொழிகள் சிலவற்றைக் கூறுக? = இறையியல், வானியல், உடலியல், சமூகவியல் ஆகியவை

268) தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் எந்த மன்னருக்கு உற்ற நண்பராக இருந்து வந்தார்? = தஞ்சை ஆண்ட சரபோசி மன்னருக்கு

269) எந்த வயதின் போது தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் குற்றால குறவஞ்சிக்கு நிகராக பெத்தலகேம் குறவஞ்சியை இயற்றினார்? = 25 ஆம் வயதில்

270) தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் இயற்றிய வேறு நூல்கள் எது? = ஞானதச்சன், ஞானவுலா, ஆரணாதிந்தம், பல்வேறு கீர்த்தனங்கள்

271) ‘வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = குற்றாலக் குறவஞ்சி

272) ‘தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துறைதோறுந் துடித்தெழுந்தே’ - என்று பாடியவர் யார்? = பாவேந்தர் பாரதிதாசன்

273) பாரதிசானின் இயற்பெயர் யாது? = சுப்புரத்தினம்

274) பாரதிதாசன் பிறந்த ஆண்டு எது? = 1891

275) பாரதிதாசன் அவர்களின் பெற்றோர் யார்? = கனகசபை - இலக்குமி அம்மாள்

276) பாரதிதாசன் இளமையிலேயே எந்த மொழியில் சிறந்தவராக புலமை பெற்று இருந்தார்? = பிரெஞ்சு மொழி



Download more study materials visit www.tnpsctamil.in 17 of 45.

திரு.பழனி முருகன் B.E

277) ‘தமிழ்நாட்டின் இரசூல்கம்சதேவ்’ - என்று பாராட்டப்பட்டவர் யார்? = பாரதிதாசன்

278) இரசூல்கம்சதேவ் அவர்கள் எந்த நாட்டை சேர்ந்த கவிஞர் ஆவார்? = உருசிய நாட்டு கவிஞர்

279) ‘உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே’ என்றும் ‘இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால் துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்’ - என்று கூறியவர் யார்? = பாரதிதாசன்

280) பாரதிதாசன் இயற்றிய காப்பியங்கள் சிலவற்றைக் கூறுக? = குடும்பவிளக்கு, பாண்டியன் பரிசு, இருண்டவீடு, தமிழச்சியின் கத்தி, சேரதாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு, குறிஞ்சித்திட்டு ஆகியவை

281) பிசிராந்தையாரின் எந்த நாடக நூல் சாகித்திய அகடாமி விருதைப் பெற்றது? = பிசிராந்தையார்

282) பாரதிதாசனின் எந்த வரிப்பாடலை புதுவை அரசு தமிழ்வாழ்த்துப் பாடலாக அறிவித்தது? = ‘வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே’

283) பாரதிதாசன் நடத்தி வந்த இலக்கிய இதழ் எது? = குயில்

284) பாரதிதாசனுக்கு பாவேந்தர் என்ற பட்டத்தை அளித்தவர் யார்? = அண்ணா

285) அண்ணா அவர்கள் எந்த ஆண்டு பாரதிதாசனுக்கு பாவேந்தர் என்ற பட்டத்தினை சூட்டினார்? = 1946

286) பாரதிதாசன் இறந்த ஆண்டு எது? = 1964

287) ‘என் தாய்மொழி நாளை இறக்குமேயனால் நான் இன்றே இறப்பேன்’ - என்று கூறிய புலவர் யார்? = இரசூல் கம்சதேவ்

288) பாரதிதாசன் பரம்பரையின் மூத்த தலைமுறைக் கவிஞர்களுள் ஒருவர் யார்? = முடியரசன்

289) எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் - என்ற வரியின் பாடலை பாடிய கவிஞர் யார்? = பாரதிதாசன்

290) எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = பாண்டியன் பரிசு

291) முடியரசனின் இயற்பெயர் யாது? = துரைராசு

292) தன் மறைவின் போது எந்த சடங்குகளும் வேண்டாம் - என்று உரைத்த கவிஞர் யார்? = முடியரசன்

293) முடியரசன் தமிழாசிரியாக பணியாற்றிய இடம் எது? = காரைக்குடி மீ.சு.உயர்நிலைப் பள்ளி

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 18 of 45.

294) முடியரசன் இயற்றிய வேறு நூல்கள் எது? = பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள்

295) யாருடைய கவிதைகளை சாகித்திய அகாடமி இந்தியிலிம் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது? = முடியரசன்

296) முடியரசின் எந்த நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது? = பூங்கொடி

297) எந்த ஆண்டு முடியரசன் எழுதிய பூங்கொடி நூல் தமிழக அரசின் விருதைப் பெற்றது? = 1966

298) எந்த இடத்தில் நடைபெற்ற விழாவில் முடியரசனுக்கு கவியரசு என்ற பட்டம் வழங்கப்பட்டது? = பறம்பு மலை

299) பூக்கின்ற மலர்களெல்லாம் பூக்கள் அல்ல - என்று பாடியவர் யார்? = முடியரசன்

300) 'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' - என்று பாடியவர் யார்? = கண்ணதாசன்

301) கண்ணதாசன் பிறந்த ஊர் எது? = சிறுகூடல்பட்டி

302) கண்ணதாசனின் பெற்றோர் பெயர்கள் யாது? = சாத்தப்பன் - விசாலாட்சி

303) கண்ணதாசனின் இயற்பெயர் யாது? = முத்தையா

304) கண்ணதாசன் நடத்தி வந்த இதழ்கள் யாவை? = தென்றல், தென்றல்திரை, சண்டமாருதம், முல்லை, கண்ணதாசன் ஆகியவை

305) கண்ணதாசனின் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் யாது? = 1927 - 1981

306) கண்ணதாசனின் சாகித்திய அகடாமி பரிசு பெற்ற நாவல் எது? = சேரமான் காதலி

307) எந்த ஆண்டு கண்ணதாசன் எழுதிய நாவலான சேரமான் காதலிக்கு சாகித்ய அகடாமி விருது வழங்கப்பட்டது? = 1980

308) கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர் - என்று புகழப்பட்டவர் யார்? = சிற்பி பாலசுப்பிரமணியம்

309) சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் பிறந்த ஊர் எது? = பொள்ளாச்சி - கோவை மாவட்டம்

310) சிற்பி பாலசுப்பிரமணியம் இயற்றிய வேறு நூல்கள் யாது? = சிரித்த முத்துக்கள், நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஆதிரை முதலியன

311) சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்றிய உரைநடை நூல்கள் எது? = இலக்கிய சிந்தனை, மலையாளக் கவிதை, அலையும் சுவடும், ஒரு கிராமத்து நதிக்கரையில் ஆகியவை



Download more study materials visit www.tnpsctamil.in 19 of 45.

312) சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய எந்த நூல் சாகித்திய அகாடமி விருது பெற்றது? = ஒரு கிராமத்து நதி

313) எந்த ஆண்டு சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய ஒரு கிராமத்து நதி நூலுக்கு சாகித்ய அகடாமி விருது வழங்கப்பட்டது? = 2002

314) நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தளை என்ற கவிதை பகுதி சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய எந்த நூலிருந்து எடுக்கப்பட்டது? = ஒளிப்பறவை

315) முன்னால் தெரிவது முத்துக் கொண்டைச் சேளக்கொல்லை - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = ஒளிப்பறவை

316) நா.காமராசன் அவர்கள் பிறந்த ஊர் எது? = மதுரை மாவட்டம் - போடி - மீனாட்சிபுரம் கிராமம்

317) நா.காமராசனின் இயற்பெயர் யாது? = வேங்கட மகாலிங்கம்

318) கிராமியச் சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகளை எழுதியவர் யார்? = நா.காமராசன்

319) நா.காமராசன் அவர்கள் எழுதிய கறுப்பு மலர்கள் என்ற நூல் வெளிவந்த ஆண்டு எது? = 1971

320) நா.காமராசனின் எந்த நூல் கவிதை உலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது என்று அறிஞர்களால் புகழப்பட்டது? = கறுப்பு மலர்கள்

321) நா.காமராசன் இயற்றிய வேறு நூல்கள் யாது? = சூரியகாந்தி, சகாராவை தாண்டாத ஒட்டகங்கள், தாஜ்மகாலும் ரொட்டித்துண்டுகளும் ஆகியவை

322) உருவகம் என்ற வழக்கு புதுக்கவிதைகளில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது? = படிமம்

323) புதுக் கவிதைகளுக்கு உயிர்ப்பும் வாழ்வும் வழங்குவன எது? = படிமங்கள்

324) கவித்துவக் காட்சிகளை விவரிக்கும் சொல்லாட்சிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = படிமங்கள்

325) நா.காமராசன் அவர்கள் தன் கவிதையில் இந்த பிரபஞ்ச வனத்தின் பகல் பூக்கள் என்று எதனை குறிப்பிடுகிறார்? = கண்கள்

326) ‘தண்ணீர் வங்கிகள்’ - என்ற கவிதையை இயற்றியவர் யார்? = ந.கருணாநிதி

327) ந.கருணாநிதி அவர்கள் பிறந்த ஊர் எது? = கடலூர் மாவட்டம் - சிதம்பரம்

328) ‘இறைக்கின்றபொறிக ளாலே இருக்கின்றநீரை எல்லாம்’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = தண்ணீர் வங்கிகள்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

329) சோலையிலே புகுவேன்; மரங்கள் கூப்பிடும் என்று கூறியவர் யார்? = திரு.வி.க

330) மன்னவனும் நீயோ; வளநாடும் உன்னதோ! உன்னையறிந்தா தமிழை ஓதினேன்' என்று சினந்து கூறியவர் யார்? = கம்பர்

331) 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' - என்ற வரியை பாடிய புலவர் யார்? = திருநாவுக்கரசர்

332) 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = தேவாரம்

333) சைவத்திருமுறை எனும் நூலில் முதல் ஏழு திருமுறைகள் எந்த பெயரில் அழைக்கப்படுகின்றன? = தேவாரம்

334) தேவாரத்தில் முதல் மூன்று திருமுறைகளை பாடியவர் யார்? = திருஞானசம்பந்தர்

335) தேவாரத்தில் 4, 5, 6 திருமுறைகளை பாடியவர் யார்? = திருநாவுக்கரசர்

336) தேவாரத்தில் 7 வது திருமுறையை பாடியவர் யார்? = சுந்தரர்

337) திருநாவுக்கரசர் பிறந்த ஊர் எது? = தென்னார்க்காடு மாவட்டம் - திருவாமூர்

338) திருநாவுக்கரசரின் பெற்றோர் பெயர்கள் யாது? = புகழனார் - மாதினியார்

339) திருநாவுக்கரசரின் தமக்கையார் பெயர் யாது? = திலகவதி

340) திருநாவுக்கரசருக்கு பெற்றோர் இட்ட பெயர் யாது? = மருள் நீக்கியார்

341) திருநாவுக்கரசரின் வேறு பெயர்கள் சிலவற்றைக் கூறுக? = அப்பரடிகள், வாகீசர்

342) திருநாவுக்கரசரை சைவ சமயத்திற்கு மாற்றியவர் யார்? = அவர் தமக்கை திலகவதியார்

343) 'என் கடன் பணி செய்து கிடப்பதே' - என்ற திருவாக்கை அருளியவர் யார்? = திருநாவுக்கரசர்

344) 'ஆழிமழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்' - என்று தொடங்கும் வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = திருப்பாவை - நான்காம் பாடல்

345) வேதம் அனைத்திற்கும் வித்து என்று புகழப்பட்ட நூல் எது? = திருப்பாவை

346) திருப்பாவை என்னும் நூலை வேதம் அனைத்திற்கும் வித்து என்று கூறிய கவிஞர் யார்? = இராமானுஜர்

347) நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டுள்ள நூல் எது? = திருப்பாவை

348) திருப்பாவை நூலின் சிறப்பு யாது? = இருமடியாகுபெயர்



Download more study materials visit www.tnpsctamil.in 21 of 45.

திரு.பழனி முருகன் B.E

349) திருப்பாவை எனும் நூலில் உள்ள பாக்கள் எத்தனை = 30 பாக்கள்

350) திருப்பாவை பாடல்கள் அனைத்தும் எந்த பாவகையைச் சார்ந்தது? = வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் கொச்சகக் கலிப்பா வகை

351) திருப்பாவை என்ற நூலை இயற்றியவர் யார்? = ஆண்டாள்

352) ஆண்டாள் அவர்கள் யாருடைய வளர்ப்பு மகள் ஆவார்? = பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்

353) ஆண்டாள் இயற்றிய வேறு நூல் எது? = நாச்சியார் திருமொழி

354) மழைக்கு அதிபதியின் வேறு பெயர் யாது? = பர்ஜன்யன்

355) எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை பிறந்த ஊர் எது? = கரையிறுப்பு - திருநெல்வேலி மாவட்டம்

356) எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை இயற்றிய வேறு நூல்கள் எது? = போற்றித் திருவகவல், இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் ஆகியன

357) எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை எழுதிய எந்த இரு நூல்கள் தற்போது கிடைக்கவில்லை? = இரட்சணியக் குறள், இரட்சணிய பால போதனை

358) ‘கல் மனதையும் கரையச் செய்யும் பக்திப் பாடல்களின் தொகுப்பு’ என்று பாராட்டப்பட்ட நூல் எது? = இரட்சணிய மனோகரம்

359) இரட்சணிய மனோகரத்தின் பெரும்பகுதி எந்த நூலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பாகும்? = இரட்சணிய யாத்திரிகம்

360) கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்பட்ட புலவர் யார்? = எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை

361) விடாப்பிடியாக ஒரு செயலை முன்னின்று நடத்திக்காட்டுதலுக்கு வழங்கப்படும் பெயர் யாது? = துசங்கட்டுதல்

362) துசங்கட்டுதல் என்பது ஒரு___? = வட்டார வழக்கு சொல்லாகும்

363) ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல் எது? = வீரசோழியம்

364) வீரசோழியம் என்ற நூலை இயற்றியவர் யார்? = புத்தமித்ரர்

365) வீரசோழிய நூலுக்கு உரை எழுதிய புலவர் யார்? = பாரதம் பாடிய பெருந்தேவனார்

366) தெய்வச் சிதம்பரத் தேவா உன் சித்தந்திரும்பி விட்டாற் - என்று தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = பட்டினத்துப் பிள்ளை

367) மேற்கு திசையில் உள்ள சிறந்த நகரமான மெசினா பட்டினமானது எந்த ஆண்டு நில அதிச்சியினால் அழிந்து நீருக்கும் நெருப்புக்கும் இரையானது? = 1908


Download more study materials visit www.tnpsctamil.in 22 of 45.

368) ‘மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையான்’ - என்று கல்விச் செல்வத்தை பற்றி பாடியவர் யார்? = ஔவையார்

369) முற்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய பெண்கள் யார்? = ஔவையார், பூதப் பாண்டியன் பெருந்தேவியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் ஆகியோர்

370) ‘பெருத்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம் பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்’ - என்று பாடிய புலவர் யார்? = கம்பர்

371) அறத்தினாலன்றி அமரர்க்கும் அரும்பகை கடத்தல் - என தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = கம்பர்

372) ஆளையா உனக்கமைந்தன மாருதம் அறைந்த - என்ற பாடலை பாடியவர் யார்? = கம்பர்

373) சுவை என்னும் தமிழ்ச் சொல்லும், எந்த வட சொல்லும் ஒரே பொருள் உடையன என்று கூறப்படுகிறது? = ரஸம் எனும் வடச் சொல்

374) நாவினால் நுகரப்படும் சுவை எத்தனை வகைப்படும்? = 6 வகைப்படும்

375) செவியால் நுகரப்படும் சுவை எத்தனை வகைப்படும்? = குண, அலங்காரங்களாகிய சொற்சுவைகளும், ஒன்பது வகையான பொருட்சுவைகளும் அடங்கும்

376) ஒன்பது வகையான பொருட்சுவைகள் யாவை? = நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை ஆகியவை

377) நகை என்ற சுவை யாரால் உணரப்படும் என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுகிறார்? = கண் மற்றும் செவி ஆகிய பொறிகளாலும் திட்பமுற உணரும் நுட்பவுணர்வுடையார்க்கன்றி ஏனையோருக்கு இச்சுவைகள் உணர்தற்கரியன

378) காப்பியங்களில் பயின்று வராத பொருட்சுவை எது? = சமனிலை

379) ஒன்பது சுவையுள் சமனிலையாவது எதைக் குறிப்பிடுகிறது? = சாந்தம்

380) சுவை என்பதன் வேறு பெயர் யாது? = மெய்ப்பாடு

381) உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றால் வெளிப்படுவது எது? = மெய்ப்பாடு

382) ஒவ்வொரு சுவையும் தோன்றுவதற்கு மூலமான பொருள்கள் நந்நான்கு என்று கூறியவர் யார்? = தொல்காப்பியர்

383) தொல்காப்பியர் அவர்கள் வீரம் என்ற சொல்லை எந்த சொல்லால் குறிப்பிடுகின்றார்? = பெருமிதம்

384) வீரம் என்ற சொல் பெருமிதம் என்று குறிப்பதை தொல்காப்பியர் கூறும் வரி எது? = ‘யாவரொடு ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின் பெருமிதம்’



Download more study materials visit www.tnpsctamil.in 23 of 45.

திரு.பழனி முருகன் B.E

385) எந்த நான்கு பொருள்கள் மூலம் பெருமிதம் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்? = கல்வி, தறுகண், இசை, கொடை ஆகியவை

386) பகைவராயினார் என் அடியின் கீழ் ஒதுங்கி நின்று ஈ என இரப்பராயின் இந்த அரசராட்சியைக் கொடுப்பது பெரிதன்று, என் உயிரையே வேண்டினும் கொடுப்பேன் என்று தன் கொடை வீரத்தை பற்றி வீரர்களிடம் கூறிய மன்னன் யார்? = நலங்கிள்ளி என்ற சோழ மன்னன்

387) புறம்புநாடு எத்தனை ஊர்களை கொண்டதாக கபிலர் கூறுகிறார்? = 300 ஊர்கள்

388) சோழன் கரிகாலன் மற்றும் சேர மன்னன் பெருஞ்சேரலாதன் ஆகிய இருவருக்கும் போர் நடைபெற்ற இடம் எது? = வெண்ணிப்பறந்தலை

389) வெண்ணிப்பறந்தலை என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தன் மார்பிலே தைத்து உருவின புண்ணும் புறப்புண் என்று எண்ணி வாளோடு வடக்கிருந்து உயிர் நீத்த மன்னன் யார்? = சேர மன்னன் பெருஞ்சேரலாதன்

390) பகைவர்மேற் செய்யும் வன்கண்மையை என்னவென்று சொல்வர்? = பேராண்மை

391) ஒரு தாழ்வு வந்தாயின் அது தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டுக் கண்ணோட்டமுடன் உதவி செய்தலை அவ்வாண்மைக்கு என்னவென்று சொல்வர்? = கூர்மை

392) வண்டை நோக்கி பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்ற அன்பின் திறத்தினை கூறிய கவிஞர் யார்? = மாணிக்கவாசகர்

393) பட்டனத்தடிகள் போற்றிய மூவர் யார்? = திருநீலகண்டர், கண்ணப்பன், சிறுதொண்டர்

394) எந்த இரு நூல்களில் கண்ணப்பனின் பெருமைகள் பேசப்படுவதால் சைவ சமயத்தை நிலை நிறுத்தியவர்களில் நால்வருக்கும் முந்தியவன் என்று கூறப்படுகிறது ? = திருவாசகத்திலும், தேவாரத்திலும்

395) 'காளத்தி நாதனை வணங்கிய திருஞானசம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார் போல் வேடர் பெருமானாகிய கண்ணப்பனைக் கை தொழுதாரென்று' - என்ற வரியை எழுதியவர் யார்? = சேக்கிழார்

396) காளத்திநாதனை முறைப்படி பூசனை செய்து வந்தவர் யார்? = சிவகோசரியார் என்ற வேதியர்

397) கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன் என்று கொண்டவர்கள் என்று குறிப்பிடப்படும் இருவர் யார்? = காளத்திநாதன் மற்றும் கங்கை வேடனான குகன்

398) முற்றந் துறந்த பட்டினத்தடிகள் என்று தமிழகம் போற்றிப் புகழப்படும் தலைவர் யார்? = பெரியார்


Download more study materials visit www.tnpsctamil.in 24 of 45.

399) பெரியார் யாரின் அருஞ்செயலை நினைந்து கரைந்து உருகுனிரார் என்று கூறப்படுகிறது? = கண்ணப்பன்

400) நாடு துறந்து காடு புகந்தபின்னர் அவன்பால் அன்பு கொண்டவர்கள் எத்தனை பேர் என்று கூறப்படுகிறது? = 3 பேர் - அவை

1) கங்கைக் கரையில் - குகன்; 2) கிஷ்கிந்தையில் - சுக்ரீவன்;

3) இலங்கையில் - விபீஷணன்; ஆகியோர் ஆவர்

401) 'தன்னுயிர் புகழ்க்கு விற்றசடாயு' - என்று சடாயுவை பாராட்டியவர் யார்? = அனுமன்

402) கழுகின் வேந்தன் என்று அழைக்கப்படுபவர் யார்? = சடாயு

403) சீதையை இராவணன் கடத்தி சென்றான் என்று இராமனிடம் முதலில் கூறியவர் யார்? = சடாயு

404) குகனை போன்று உயிர் கொடுக்கத் துணியவும் இயலாத தனது சிறுமையை நினைத்து வருந்திய மன்னன் யார்? = சுக்ரீவன்

405) வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்படும் நூல் எது? = இராமாயணம்

406) இராமாயணத்தை இயற்றியவர் யார்? = வால்மீகி

407) கிரேக்கர்களின் பழங்காப்பியம் எனப் பாராட்டப்படும் நூல் எது? = ஹோமர் பாடிய இலியட்

408) மெனலஸ் என்ற அரசர் பெருமானின் மனைவி பெயர் யாது? = ஹெலன்

409) மெனலஸ் என்ற அரசரின் மனைவியான ஹெலனை எந்த நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் போர் மூண்டது? = பாரீஸ் என்ற இலிய நாட்டு அரசன்

410) மெனலஸ் என்ற அரசரின் மனைவி ஹெலன் பெருமாட்டியை பாரீஸ் என்ற இலிய நாட்டு அரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினை பாடும் நூல் எது? = இலியட்

411) இலத்தீன் மொழியின் பழங்காப்பியம் என்று கூறப்படும் நூல் எது? = வர்ஜில் என்ற பாவாணர் பாடிய ஈனிட்

412) ஈனிட் என்ற நூல் எந்த அரச பெருமானின் வரலாற்றைக் கூறுகிறது? = உரோம பேரரசினை தோற்றுவித்த ஈனியஸ் என்ற அரசனின் வரலாறு

413) தமிழிலக்கிய வரலாற்றில் முதல் முதலாக காப்பியம் எனச் சிறப்பு தோன்றிய நூல் எது? = சிலப்பதிகாரம்

414) முடிமக்களைப் பற்றியே கதையைக் கேட்டும் எழுதியும் வந்த நானே, இப்போது குடிமக்கள் கதையைக் கேட்டும் எழுதியும் வருகிறேன் என்று கூறியவர் யார்? = தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்


Download more study materials visit www.tnpsctamil.in 25 of 45.

415) மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வை பற்றி சிலப்பதிகார நூலில் எந்த காண்டத்தில் கூறப்படுகிறது? = புகார் காண்டம்

416) கணவனை இழந்த கண்ணகியின் அவலச்சுவையைப் பற்றிக் கூறும் சிலப்பதிகார காண்டம் எது? = மதுரைக் காண்டம்

417) கண்ணகிக்காக எடுத்த கல்லினை வட அரசர் தலைமீது ஏற்றி வந்த செங்குட்டுவனது வீரத்தை பற்றி பாடும் சிலப்பதிகார காண்டம் எது? = வஞ்சிக் காண்டம்

418) சிலப்பதிகார நூலில் துறவறத்தின் முடிமணியாக திகழ்பவர் யார்? = கண்ணகி

419) திருவள்ளுவர் தன் திருக்குறள் நூலில் எந்த பிரிவில் குடிகளது சிறப்பினை பற்றிக் கூறுகிறார்? = பொருளதிகாரம்

420) பொருளாதிகார பிரிவில் எத்தனை பிரிவுகளில் திருவள்ளுவர் குடிகளது சிறப்பினை பற்றிக் கூறுகிறார்? = கடைசி 13 அதிகாரங்களில்

421) திருக்குறளில் குடிகளது சிறப்பினை பற்றிக் கூறும் இயல் எது? = ஒழிபியல்

422) பொருட்பாலின் முடிமணியாக திகழும் இயல் எது? = ஒழிபியல்

423) பாட்டாளி ஓய்வு பெறுவது, சமூக நீதியில் ஒன்று, அது அடிப்படை நீதி - என்று கூறியவர் யார்? = அண்ணா

424) எவற்றை கொண்டு அறிவாளர்கள் ஒரு சமூகத்தின் நிலையை மதிப்பிடு செய்கிறார்கள்? = ஓய்வு நேரம் - ஓய்வின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு

425) நல்லறிவாளர்கள் எவற்றினைக் கொண்டு நாகரிகத்தின் அளவுகோலாக கொள்கிறார்கள்? = பெரும்பாலான மக்களுக்கு கிடைக்கும் ஓய்வு

426) ரோம் நாட்டை சேர்ந்தவர்கள் எதனைக் கண்டுகளித்து ஓய்வு நேரத்தை செலவிட்டனர்? = மற்போர், வாட்போர் செய்து ஆற்றலைக் காட்டிடும் வீர விளையாட்டுகளை கண்டனர்

427) கிரேக்க நாட்டை சேர்ந்தவர்கள் எதனைக் கண்டுகளித்து ஓய்வு நேரத்தை செலவிட்டனர்? = காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்கள் கண்டு கருத்து பெறுவதில்

428) ஸ்பெயின் நாட்டை சேர்ந்தவர்கள் எதனைக் கண்டுகளித்து ஓய்வு நேரத்தை செலவிட்டனர்? = முரட்டுக் காளையுடன் போரிடுவதை

429) பழந்தமிழர் சேர்ந்தவர்கள் எவற்றினைக் கண்டுகளித்து ஓய்வு நேரத்தை செலவிட்டனர்? = ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீரவிளையாட்டில்

430) இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர்கள் எதனைக் கண்டுகளித்து ஓய்வு நேரத்தை செலவிட்டனர்? = கோழிச் சண்டை, கரடிச்சண்டை ஆகியவை

திரு. பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 26 of 45.

431) அமெரிக்க நாட்டை சேர்ந்தவர்கள் எதனைக் கண்டுகளித்து ஓய்வு நேரத்தை செலவிட்டனர்? = குத்துச்சண்டை

432) அமெரிக்க நாட்டில் எந்த பொழுது போக்கை பார்த்து களிப்பதற்காக பெரும்பணம் செலவிடப்பட்டு வருகிறது? = குத்துச்சண்டை

433) க்ளே எனும் குத்துச்சண்டை வீரன் தன்னுடன் போட்டிக்கு நின்ற எந்த வீரனை ஒரே குத்தில் வீழ்த்தினார்? = விஸ்டன்

434) க்ளே மற்றும் விஸ்டன் ஆகியோர் எந்த நாட்டை சேர்ந்த குத்துச்சண்டை வீரர்கள் ஆவர்? = நீக்ரோக்கள்

435) உயிர்கள் நிலைத்த இன்பத்தில் மகிழ வேண்டுமாயின் இனபம் வழங்குதலை விட துன்பம் நீக்கம் செய்வதே முதற்கடன் என்று கூறியவர் யார்? = குன்றக்குடி அடிகளார்

436) 'பாசப் பழிமுதல் பறிப்பார் போல' - என்று கூறியவர் யார்? = சேக்கிழார்

437) துன்ப நோய்க்கு மருந்தாகவும், இன்ப விளைவுக்கு ஊற்றுக் கண்ணாகவும் விளங்குவது எது? = அன்பு

438) உலகினின் பாவத்தை தமது செந்நீரால் கழுவியவர் யார்? = ஏசு பெருமான்

439) ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுங்கள்; பகைமை பாராட்டாதீர்கள்; மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள்; எல்லோருக்கும் எப்பொழுதும் அன்பு காட்டுங்கள் - என்று வையகத்தை வழி நடத்தியவர் யார்? = ஏசு பெருமான்

440) 'கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் மீது கருணை பொழியப்படும்' என்ற அறவுரை எந்த நூலில் கூறப்படுகிறது? = விவிலியம்

441) 'இறைவா நான் அன்பு விதையை விதைப்பேனாக!, மக்கள் என்னிடம் அன்பு செலுத்துவதற்கு முன், நான் அவர்களிடம் அன்பு காட்டுவேனாக' - என்று கூறியவர் யார்? = அர்ச் ஃபிரான்ஸிஸ்

442) 'பிறர் அன்பு பாராட்டமலும் பிறர் அன்புக்கு பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா' - என்று அருள்வாக்கு கூறியவர் யார்? = முகமது சாகேபின்

443) 'கடவுள் படைப்பிலுள்ள மக்கள் அனைவரையும் தம் பிள்ளைகளைப்போற் கருதி அனைவர் இன்ப துன்பங்களையும் ஒருவன் எப்பொழுது தனதாக கருதுகிறானோ அப்பொழுதே அவன் ஸீபி ஆவான்' - என்று அருள்வாக்கு கூறியவர் யார்? = முகமது சாகேபின்

444) 'மாந்தர் குலம் ஒன்றே என்பதும் அவர்கள் அனைவரும் ஒரு குலமாக வாழக் கடமைப்பட்டிருக்கின்றனர்' என்பது எந்த நூலின் உபதேசம் ஆகும்? = புனித குர்-ஆன்

445) 'அல்லா மிகுந்த தயையுள்ளவர்; கருணைக்கடல்; கிருபா சமுத்திரம்; பரம தயாளு' - என்பது எந்த நூலின் வாசகம் ஆகும்? = புனித குர்-ஆன்

திருப்பதி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 27 of 45.

446) இஸ்லாமிய மதத்தின் இணையற்ற கொள்கை எது? = உலகத்து உயிர்களுக்கு யாரால் அதிக இன்பம் கிடைக்கிறதோ அவர்களையே அவர் அதிகமாக நேசிக்கிறார்

447) ஆசியாவில் பாரதத்திற்கு இணையான ஆன்மீக வளமிக்க ஞானிகள் பிறந்த நிலம் எது? = சீன நாடு

448) சீல தேசத்தில் தோன்றிய ஞானி பெயர் யாது? = கன்பூஷியஸ்

449) வாழ்க்கையின் மூலதத்துவமே அன்பு தான் என்று கூறியவர் யார்? = கன்பூஷீயஸ்

450) 'உனக்கு பிடிக்காத ஒன்றை, நீ பிறருக்கு பிடிக்குமென்று நினைந்து செய்யாதே!' - என்று கூறியவர் யார்? = கன்பூஷீயஸ்

451) கன்பூஷீயஸ் என்ற சீன ஞானி எத்தனை வகையான நற்குணங்களை வற்புறுத்தினார்? = 5 நற்குணங்களை

452) 5 நற்குணங்களில் இரண்டாவது நற்குணத்தின் பெயர் யாது? = சுன்ஜீ

453) நாம் பிறருடன் சரியாக பழக வேண்டும்; எவருடனும் முறைதவறி நடக்கக் கூடாது, நம் உள்ளத்தில் கருணையும் அன்பும் இருக்க வேண்டும் - என்று கூறிய நற்குணம் எது? = இரண்டாவது நற்குணமான சுன்ஜீ

454) சித்தார்த்தரை புத்தராக்கியது எது? = அன்பு

455) 'தாய் தன் உயிருக்கு ஆபத்து வருவதையும் கருதாது, தன் ஒரே பிள்ளையைப் பாதுகாப்பது போல மனிதன் எல்லா உயிர்களிடமும் எல்லையற்ற அன்பு கொண்டிருக்க வேண்டும் என்றும் தங்குதடையின்றி பகையோ விரோதமோ இல்லாமல் மனிதர் தமக்கு மேலும் கீழும், அங்கும் இங்கும், அகில உலகினிடமும் எல்லையற்ற அன்பு கொண்டு வாழ வேண்டும்' என்று கூறும் நூல் எது? = புத்த சமய வேதமாகிய பிடகம்

456) தயையே தர்மத்தின் வேர் என்று வற்புறுத்தும் நூல் எது? = சமண சமயத்தின் புராணங்கள்

457) தர்மத்தின் இறுதி எல்லையாக இருப்பது கருணை என்று கூறியவர் யார்? = ஜினேந்திர தேவன்

458) பகைவனோ நண்பனோ விரோதியோ வேண்டியவனோ எல்லா உயிர்களையும் எல்லா மனிதர்களையும் ஒன்றுபோல் மதித்து எல்லோரையும் தாமாகக் கருதுதலே அகிம்சை என்று அருளியவர் யார்? = மகாவீரர்

459) இந்து சமயத்தில் அன்பினை மையமாகக் கொண்டு வாழ்க்கை நெறியை விளக்குகின்றன என்று கூறிய நூல் எது? = வேதங்கள்

460) 'எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக, எல்லோரும் அன்புடன் உரையாடட்டும், அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும், நீங்கள்



Download more study materials visit www.tnpsctamil.in 28 of 45.

எல்லோரும் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொண்டு வாழ்வீர்களாக' - என்று வழிநடத்தும் வேதம் எது? = ரிக் வேதம்

461) அன்பே! அன்பே! யென்று அழுது அரற்றினால் அடையலாம் - என்று கூறிய புலவர் யார்? = தமிழ்மறை தந்த திருமூலர்

462) இறையின்பத்தை ஈரமுடையவர்களே அனுபவிக்க முடியும் என்று கூறிய புலவர் யார்? = திருமூலர்

463) திருமந்திரம் என்னும் நூல் வகுத்து உரைக்கும் செய்திகள் யாது? = சமய வாழ்க்கை நியதிகள், ஒழுக்கங்கள்

464) திருமூலர் எடுத்துக் காட்டும் சமய வழிபாட்டு கடமைகள் எத்தனை? = நான்கு

465) திருமூலர் கூறிய நான்கு சமய வழிபாட்டில் எத்தனை வழிபாடுகள் கடவுளுக்கு செய்யும் வழிபாடாகும்? = ஒன்று வழிபாடு மட்டுமே

466) திருமூலர் கூறிய நான்கு சமய வழிபாட்டில் எத்தனை வழிபாடுகள் உயிரினங்கள் மாட்டு அன்பு செய்யும் வழிபாடாகும்? = மூன்று வழிபாடுகள்

467) சமய வழிபாட்டின் கடமைகள் எது? = பசுவிற்கு புல் கொடுப்பது, பசித்தவர்க்கு உணவளிப்பது, கேட்பவர் இன்ப நலம் பெறும் இனிய சொற்களை வழங்குதல் ஆகியவை

468) எவ்வுயிர்க்கும் அன்பாக இருப்பதே ஈசனுக்கு அன்பாகும் என்று தெளிவாக உறுதியாக கூறியவர் யார்? = திருமூலர்

469) சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு எனத் திகழப்பட்டவர் யார்? = அப்பரடிகள்

470) எல்லார் மாட்டு அன்பு செய்யாதவர்கள் சமயச் சடங்குகளாகிய கங்கை, காவிரி முதலியன புண்ணிய ஆறுகளில் மூழ்கினாலும் உரிய பயனைப் பெறமுடியாது - என்று கூறியவர் யார்? = அப்பர்

471) நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு, வற்றினாலேயே திருவருட்புனல் பொங்கி வழியும் என்பது யாருடைய கருத்து ஆகும்? = அப்பர்

472) கல்லில் சிற்றுளி கொண்டு கல் தச்சர்கள் எழுத்து பொறிப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது? = கல்வெட்டுகள்

473) கல்வெட்டுகளின் வேறு பெயர் யாது? = சிலாசானங்கள்

474) கல்வெட்டுகள் நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்திய மேல்நாட்டுப் பேரறிஞர்கள் யார்? = ராபர்ட் சிவெல், டாக்டர் கீலஹார்ன், டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் ஷீல்ட்ஷ்

475) போரில் உயிர் நீத்த வீரர்களின் நினைவை கூறும் வகையில் நடுகல் அமைத்து விழா நடத்தி பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றிருக்கும் நூல் எது? = தொல்காப்பியம்


Download more study materials visit www.tnpsctamil.in 29 of 45.

476) நடுகல் அமைப்பை பற்றி தொல்காப்பிய நூலில் பாடப்படும் திணை எது? = வெட்சித்திணை

477) நல்லமர்க் கடந்த நாணுடை மறவர் - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = அகநானூறு

478) ‘அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித் தினிநட் டனரே கல்லும்’ - என்று நடுகல் பற்றிக் கூறும் வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு

479) ‘நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர் செல்லா நலிசைப் பெயரோடு நட்ட நல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே’ - என்ற வரி இடம்பெற்றுள்ள வரி எது? = மலைபடுகடாம்

480) ‘பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி நட்ட கல்லும் மூதூர் நத்தமும்’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = திருவாரூர் மும்மணிக்கோவை

481) திருவாரூர் மும்மணிக்கோவை என்ற நூலின் ஆசிரியர் யார்? = சேரமான் பெருமாள் நாயனார்

482) சமணர் கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் எது? = திருநாதர்குன்று (செஞ்சி அருகில்), ஆனைமலை (திருநெல்வேலி), திருச்சிராப்பள்ளி குன்று

483) கல்வெட்டுகளில் எழுதப்படும் முதல் வாசகம் எது? = ஸ்வஸ்தியஸ்ரீ என்ற மங்கல வாசகம்

484) கல்வெட்டுகளில் இறுதியில் எழுதப்படும் வாசகம் எது? = பன்மாகேஸ்வ ரஷை மற்றும் வைஷ்ணவரஷை

485) மெய்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும் முறை முதன் முதலில் எந்த மன்னன் காலத்தில் தொடங்கப்பட்டது? = முதல் இராசராசசோழனால் - கி.பி 893 ஆண்டில்

486) ‘நீரின் றமையா வுலகம் போலத் தம்மின் றமையா நந்நயந் தருளி - என்று கணவனின் இன்றியமைமையை கூறும் வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = நற்றிணை

487) தான் சமைத்ததை இனிது! இனிது! எனக் கணவன் சுவைத்துண்பதைக் கண்டு மகிழ்ச்சி அடையும் பெண்ணை பற்றி கூறும் நூல் எது? = குறுந்தொகை (167)

488) ‘பிறப்போ ரன்ன வுடன் வயிற் றுள்ளும் சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு (183 வது பாடல்)

489) ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாக விருந்தோம்பலை குறித்த ஆசிரியர் யார்? = தொல்காப்பியனார்

490) தினைப்புனங்காத கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியையும் மயங்கி உயங்கச் செய்தாள் என்று கூறும் நூல் எது? = அகநானூறு

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 30 of 45.

491) சிறுமியர் சிறுவரோடு ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும் நீராடியும் நீழலிருந்தும் ஆரவாரம் செய்து பாராட்டிப் புகழுமாறு சிறுவர் குளக்கரையிலுள்ள உயர்ந்த மரத்தின் உச்சியில் ஏறி நீரில் விழுந்து குளத்தில் அடி வரையிற் சென்று அடிமண் கொண்டு கரை சேர்ந்து வெற்றி கொண்டாடி வருவர் என்று புறநானூற்று பாடலில் கூறியவர் யார்? = தொடித்தலைவிழுத்தண்டினார்

492) வீட்டிலும் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி பெண்கள் வழிபட்டனரென எந்த நூல் கூறுகிறது? = நெடுநல்வாடை

493) நாடு விட்டு நாடு சென்று நயம்படத் தூதுரைத்தனர் - என்று கூறப்படும் சங்ககால பெண் யார்? = ஔவையார்

494) வழக்கறிஞர் துணை நாடாது, மன்னனது மாபெரும் மன்றத்திலும் வழக்கைத் தானாகவே தன் திறம்படக் கூறிய பெண் யார்? = கண்ணகி

495) வெற்றி முழக்க கூட்டத்திலும் பகைவனை பாராட்டிய பெண் யார்? = வெண்ணிக் குயத்தியார்

496) தன்னலங்கருதாது மக்கள் நலங்கருதி மக்கள் தொண்டாற்றி துறவுக்கும் தொண்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் அமைந்த பெண் யார்? = மணிமேகலை

497) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று உணவுக் கொடை புரிந்தும் சிறைக்கோட்டமெல்லாம் அறக் கோட்டமாய் அருள் கொண்டும் பெருந்தொண்டாற்றிய மங்கை யார்? = மணிமேகலை

498) ஆடவரைப் போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதை கூறும் இலக்கண செய்யுள் இடம்பெற்றுள்ள நூல் எது? = மூதின் முல்லை

499) கணவனும் தமையனும் களத்தில் இறக்க, மைந்தனை போர்க்கோலம் புனைவித்துப் போருக்கு அனுப்பிய தாயின் வீரத்தை பற்றிக் கூறும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு (179)

500) நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனி மகனும் போரில் இறக்க வருந்தாது, ஈன்றஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரத்தை பற்றிக் கூறும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு (277)

501) வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் விளங்கும் மகளிர் தமக்கு மனைவிராய் வாய்ப்பதையே பெரும் பேறாக கருதினர் ஆடவர் என்ற கருத்து கொண்ட பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = குறுந்தொகை (14 வது பாடல்)

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

502) மரபுப்பிழை மற்றும் மரபுச்சொற்கள் சிலவற்றைக் கூறுக :

| மரபுப்பிழை | | மரபுச்சொல் | மரபுப்பிழை | | மரபுச்சொல் |
|---|---|---|---|---|---|
| தென்னை இலை | - | தென்னை ஓலை | கஞ்சி சாப்பிடுதல் | - | கஞ்சி குடித்தல் |
| வாழைச்செடி | - | வாழைக்கன்று | வீசி | - | எய்தி |
| ஆந்தை அகவது | - | ஆந்தை அலறுவது | | | |

503) பிறமொழிச் சொற்கள் மற்றும் தமிழ்ச்சொற்கள் சிலவற்றைக் கூறுக :

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| கும்பாபிஷேக வைபவம் | திருக்குட முழுக்குவிழா |
| சைல காரியாலயங்கள் | எல்லா செயலகங்கள் |
| சுபதினம் | நன்னாள் |
| வதுவரர்கள் | மணமக்கள் |
| வர்ஷித்த மழை | பெய்த மழை |
| அட்வைஸ் | அறிவுரை |
| ரதோத்ஸவம் | தேரோட்டம் |
| பந்துமித்திரர்கள் | உறவினர் நண்பர்கள் |
| அத்யந்த ஸ்னேகிதன் | நெருங்கிய நண்பன் |
| பாலிய விவாஹம் | குழந்தை திருமணம் |
| ரெயின் வாட்டர் ஹார்வெஸ்ட் | மழைநீர் சேகரிப்பு |
| திருவோண நட்சத்திரம் | திருவோண விண்மீன் |
| பொக்கே | மலர்க்கொத்து |

திரு.பழனி முருகன் B.E

504) கொச்சைச் சொற்கள் மற்றும் நல்ல தமிழ் சொற்கள் சிலவற்றைக் கூறுக :

| கொச்சைச் சொற்கள் | நல்ல தமிழ் சொற்கள் |
|---|---|
| சாயந்திரம் | மாலை |
| வெளையாட்டில் | விளையாட்டில் |
| சீக்கா | சிகைக்காய் |
| வெள்ளாமை | வேளாண்மை |
| சித்த நாழி உக்காரு | சில நாழிகை உட்கார் |
| கண்ணாலம் | கல்யாணம் |
| சீர் செனத்தி சேத்தி | சீர் பொருள் சேர்த்து |



Download more study materials visit www.tnpsctamil.in 

505) பகுபத உறுப்பிலக்கணம் : நினைவிற்கொள்ள வேண்டியவை :

| கால நிலைகள் | வரும் எழுத்துக்கள் |
|---|---|
| இறந்தகால இடை நிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடை நிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடை நிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடை நிலைகள் | ஆ, அல், இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| தன்மை பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஒம், ஓம். கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய் |
| முன்னிலை பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர் |
| ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி | இ |
| ஏவல் பன்மை வினைமுற்று விகுதி | மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று |
| படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலை பெயரெச்ச விகுதிகள் | அ, (உம்) |
| தெரிநிலை வினையச்ச விகுதிகள் | உ, இ |

திரு. பழனி முருகன் B.E

506) எந்த மூன்று எழுத்துக்களுள் ஒன்று பெரும்பாலும் சந்தியாக வரும்? = த், க், ப்

507) சந்தி வரவேண்டிய இடத்தில் புள்ளியில்லாத எழுத்து வந்தால் அதனை எவ்வாறு அழைப்பர்? = சாரியை

508) விகுதி தனியே வராமல் துணையாக பெற்று வரும் எழுத்து____எனப்படும்? = எழுத்துப் பேறு



Download more study materials visit www.tnpsctamil.in 33 of 45.

509) ர - ற ஒலி வேறுபாடு அறிந்து பொருள் தருக :

| | |
|---|---|
| அரி | திருமால், சிங்கம், காய்களை அரி |
| அறி | அறிந்து கொள் |
| அலரி | அலரிப்பூ |
| அலறி | அழுது |
| இரத்தல் | பிச்சையெடுத்தல் |
| இறத்தல் | சாதல் |
| உரவு | வலிமை |
| உறவு | சுற்றம் |
| உரை | சொல் |
| உறை | தலையணை உறை |
| எரி | தீ |
| எறி | வீசு |
| கரி | யானை |
| கறி | காய்கறி |
| குரங்கு | வானரம் |
| குறங்கு | தொடை |
| கூரை | வீட்டுக் கூரை |
| கூறை | துணி |
| சீரிய | சிறந்த |
| சீறிய | சினந்த |
| பரவை | கடல் |
| பறவை | பறப்பவனாகிய உயிரினம் |
| மரை | மான், தாமரை |
| மறை | வேதம் |

திரு. பழனி முருகன் B.E

510) ல - ள - ழ ஒலி வேறுபாடு அறிந்து பொருள் தருக :

| | |
|---|---|
| அலகு | பறவையின் மூக்கு |
| அளகு | பெண் மயில் |
| அழகு | கவின், வனப்பு, எழில் |
| அலை | கடல் அலை |
| அளை | புற்று |
| அழை | கூப்பிடு |
| இலை | மரம், செடிகளின் இலை |
| இளை | இளைத்தல் |
| இழை | நூல் |

| | |
|---|---|
| கலை | கவின் கலைகள் |
| களை | நீக்கு, பயிர்க்களை |
| கழை | மூங்கில் |
| தலை | ஓர் உறுப்பு |
| தளை | விலங்கு |
| தழை | தழைத்தல் |
| வலி | வலிமை, வலித்தல் |
| வளி | காற்று |
| வழி | பாதை |



Download more study materials visit www.tnpsctamil.in 34 of 45.

511) ந - ண - ன ஒலி வேறுபாடு அறிந்து பொருள் தருக :

| | |
|---|---|
| அணல் | தாடி |
| அனல் | நெருப்பு |
| ஆணி | இரும்பால் ஆன ஆணி |
| ஆனி | தமிழ்மாதம் |
| ஊண் | உணவு |
| ஊன் | இறைச்சி |
| கணம் | கூட்டம் |
| கனம் | பாரம் |
| பேண் | காப்பாற்று |
| பேன் | தலையில் வாழும் பேன் |
| மணம் | நறுமணம் |
| மனம் | உள்ளம் |
| மணை | உட்காரும் பலகை |
| மனை | வீடு |
| மாண் | பெருமை |
| மான் | புள்ளி மான் |
| முந்நாள் | மூன்று நாள் |
| முன்னாள் | முந்தைய நாள் |
| தேநீர் | தேயிலை நீர் |
| தேனீர் | தேன்போலும் இனிய நீர் |
| தினை | தானியவகை |
| திணை | ஒழுக்கம், நிலம் |
| கனை | குதிரை கனைக்கிறது |
| கணை | அம்பு |

512) குறிப்பால் எழுதப்படும் சொற்களுக்கு விரிவான பொருள் தருக :

த.நா.மி.வா - தமிழ்நாடு மின்சார வாரியம்

த.நா.கு.வ.வா - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

அ/மி சௌந்தரவல்லித்தாயார் - அருள்மிகு சௌந்தரவல்லித்தாயார்

தொ.பே.எண் - தொலைபேசி எண்

ஆ.கா.க (எல்.ஐ.சி) - ஆயுள் காப்பீட்டுக் கழகம்

இ.ஆ.ப - இந்திய ஆட்சிப்பணி

S.S.A (சர்வசிக்ஷா அபியான்) - அனைவர்க்கும் கல்வி இயக்கம்

இ.எஸ்.ஏ - தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம்

டயட் (DIET) - மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 35 of 45.

**டி.பி.இ.பி (DPEP) - மாவட்ட தொடக்கக் கல்வித்திட்டம்**

**பெ.ஆ.கழகம் - பெற்றோர் ஆசிரியர் கழகம்**

**டிட்டி ஈ ஆர்ட்டி (DTERT) - ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம்**

**513) அருஞ்சொற்பொருள் தருக :**

ஆரமிர்தே - அரிய அமிழ்தே
பூரணமாய் - முழுமையாய்
புனிதம் - தூய்மை
வையம் - உலகம்
கையினாலுரை காலம் - சைகையால் உரைத்த காலம்
இரிந்திட - விலகிட
தாள் - திருவடி
ஐயை - தாய்
திரு - செல்வம்
மருவு - பொருந்திய
செய் - வயல்
மல்குதல் - நிறைதல்
குறுநகை - புன்னகை
இருநிலம் - பெரிய பூவுலகு
பூண்டனை - அணிந்துள்ளாய்
பதங்கள் - திருவடிகள்
இறைஞ்சுவாம் - வணங்குவாம்
அறுகுளம் - நீர் வற்றிய குளம்
உகுத்தும் - பெய்தும்
உவர் நிலம் - களர்நிலம்
ஊட்டியும் - சாலப் பெய்தும்
மாரி - மழை
கடாஅ யானை - மதக்களிறு
கொடைமடம் - வரையறையின்றி கொடுத்தலாகிய இயல்பு
படைமடம் - போர் நெறிக்கு மாறுபட்டு போர் புரிதலாகிய இயல்பு
ஓங்குமலை - உயர்ந்த மலை
சிலம்பு - மலைச்சாரல்
வேங்கை பிடவு - மாலைநிலத்தே வளரும் மரங்கள்
உழுவை - ஆண்புலி
முடங்கர் - முடுக்கான இடம்
சாஅய் - மெலிவுற்று
எரிமருள்வேட்கை - நெருப்பையொத்த வேங்கைமரம்
மருள் - உவமவுருபு
தோகை - மயில்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 36 of 45.

வதுவை - திருமணம்
உய்க்கும் - செலுத்தும்
ஆரிருள் - நரகம்
செறிவு - அடக்கம்
சீர்மை - விழுப்பம்
தோற்றம் - உயர்வு
மாண - மிகவும்
பணிதல் - அடங்குதல்
ஏமாப்பு - பாதுகாப்பு
சோகப்பர் - துன்புறுவர்
வடு - தழும்பு
கதம் - சினம்
காத்து - அடக்கி
செவ்வி - தகுந்த காலம்
வேளாண்மை - உதவி
ஈண்டும் - இவ்வுலகத்தும்
திரு - செல்வம்
நயனுடையான் - நல்ல உள்ளமுடையவன்
இடம் - செல்வம்
இடனில்பருவம் - வறுமையுற்றகாலம்
ஒல்கார் - தளரார்
கடன் - முறைமை
காட்சியவர் - அறிவுடையார்
நயனுடையான் - ஒப்புரவாளன்
இகல் - பகை
ஒட்ட - இசைய
தீராமை - நீங்காமல்
ஆர்க்கும் - பிணிக்கும்
அருவினை - அரிய செயல்
கலங்காது - தவறாது
ஒள்ளியவர் - அறிவுடையவர்
செறுநகர் - பகைவர்
கிழக்காம் - விழுவதாம்
மாற்றான் - பகைவர்
இடைக்கண் - நடுவிலேயே
பீலி - மயில்தோகை
சாகாடு - வண்டி
கொம்பர் - இறுதிப்போலி
நுனிக்கொம்பர் - கிளையின் நுனி
உளபோல - உள்ளன போல
வல்லை - விரைவில்
சிலை - வில்
எழீய - யாழை வாசித்து
பொழில் - சோலை
குரங்கின - வளைந்தன
மிடறு - கழுத்து


Download more study materials visit www.tnpsctamil.in 37 of 45.
திரு.பழனி முருகன் B.E

கொடி - ஒழுங்கு
கடி - விளக்கம்
எயிறு - பல்
முரல்வது - ஆரவாரித்தல்
எழால் வகை - யாழின் கூறுபாடு
எரிமலர் - முருக்கமலர்
இன்னரம்பு - யாழின் இனிய நரம்பு
செவ்வாய் - காந்தருவத்தை
உளர - தடவ
பொன் அன்னாள் - திருமகள் போல்வாள்
வெய்ய - விரும்பத்தக்க
இவுளி - குதிரை
கால் - காற்று
காலியற்புரவி - கடுங்காற்றுப்போல விரைந்த நடையினையுடைய குதிரைகள்
காய்ந்து வடிநுனை - கொல்லர் உலைக் களத்தழலில் முருகக்காய்ந்து வடிக்கப்பட்ட கூரிய நுனி
அணிநகர் - அழகிய மண்டபம்
நுனை - கூர்மை
பிணை - பெண்மான்
மாழ்கி - மயங்கி
இழுக்கி - தப்பி
தோழி - வீணாபதி
தடங்கண்ணாள் - அகன்ற கண்களையுடைய காந்தருவத்தை
எழினி - உறை
மடங்கல் - சிங்கம்
நெடுங்கண்ணாள் - வீணாபதி
பொல்லாமை - குற்றமுடைமை
கொல்லை - முல்லை நிலம்
தூமம் - அகிற்புகை
கவினி - அழகு பொருந்தி
சிறிதலாப்பொழுது - நெடுநேரம்
அரிவை - நங்கை
நபுலன் - சீவகன் தம்பி
ஓதி - கூந்தல்
பத்தர் - யாழின் ஓர் உறுப்பு
கணிபுகழ் காளை - நிமித்திகர்களால் புகழப்பட்ட சீவகன்
மாடகம் - யாழ் நரம்பை இழுத்துக் கட்டுங் கருவி
நகம் - மலை
முழை - குகை
புரைப்பல் - துளையுடைய பல்
செஞ்சூட்டு - பாம்பின் படம்
பிடவை - துணி
உரகம், பணி, பன்னகம் - பாம்பு
பருவரல் - துன்பம்
கடி - மணம்
நறை - தேன்
பரல் - கல்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 38 of 45.

சென்னி - தலை
மரைமலர் - தாமரைமலர்
கோடிகம் - ஆடை
கால் - காற்று
வரை - மலை
புதியன் - இறைவன்
செந்தழல் - வேள்வியில் மூட்டுகிற நெருப்பு
இந்தனம் - விறகு
உகம் - யுகம்
செயமாது - வெற்றித் திருமகள்
அனந்தம் - முடிவுற்றது
அறைவீர் - உரைப்பீர்
வாரி - கடல்
வேயிங்குழல் - புல்லாங்குழல்
பண்கள் - இசைப்பாட்டுகள்
அரி - சிங்கம்
அரன் - சிவன்
அவுணன் - இரணியன்
பாதவத்தை - மருத மரங்களை
அரை - இடுப்பு
கலிங்கம் - ஆடை
அமணர் - சமணர்
சிலை - வில்
நாண் - கயிறு
சயத்தம்பம் - வெற்றித்தூண்
கடகரி - மதயானை
வயமா - குதிரை
வண்டையர் கோன் - கருணாகரத் தொண்டைமான்
புலராமே - வறண்டு விடாமல்
அஞ்சனம் - கண்மை
கலுழிப்புனல் - மையைக் கரைத்து வரும் கலங்கற் கண்ணீர்
ஏகன் - இறைவன்
தற்பரன் - இறைவன்
கீர்த்தி - புகழ்
பண் - பாடல்
பதுக்கும் நாள் - புதியதாக அமைக்கும் நாள்
புலம் - அறிவு
ஈர்க்கின்ற - கவர்கின்ற
துங்கமுற - தூய்மையுற
தட்டின்றி - குறையின்றி
மூவாத - மூப்படையாத
மீன் - விண்மீன்
வதிபவர் - வாழ்பவர்
மிடிமை - வறுமை
நமன் - எமன்
நடலை - இறப்பு

திரு பழனி முருகன் B.E


Download more study materials visit www.tnpsctamil.in 

பிணி - நோய்
ஏமாப்போம் - பாதுகாப்புடன் உள்ளோம்
ஆழி - கடல், சக்கரம்
ஆழிமழைக் கண்ணா - மழைத்தெய்வமே
சார்ங்கம் - வில்
பாழியந்தோள் - வலிமையுடைய தோள்
இருவினை - நல்வினை, தீவினை
வீற்றிருத்தல் - தனித்திருத்தல்
ஓங்குநீர் - கடல்
நால்வகைப் பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
முப்பகை - காமம், வெகுளி, மயக்கம்

**514) இலக்கணகுறிப்பு தருக :**

பழச்சுவை - ஆறாம் வேற்றுமைத் தொகை
ஆரமிர்து - பண்புத்தொகை
நீங்காப் பூரணமாய் - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
காலமும் தேசமும் - எண்ணும்மை
உயிர்திரள் - ஆறாம் வேற்றுமைத் தொகை
விழுப்பொருள் - உரிச்சொற்றடர்
தொன்மக்கள் - பண்புத்தொகை
உள்ளம் - ஆகுபெயர்
உரைகாலம் - வினைத்தொகை
பழந்தமிழ் - பண்புத்தொகை
தாள் தலை - இரண்டாம் வேற்றுமைத் தொகை
நிறைந்தனை, ஒன்றினை, சார்ந்தனை, வாய்ந்தனை, பூண்டனை - முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்
மருவு செய் - வினைத்தொகை
நற்பயன், பைந்நிறம் - பண்புத்தொகைகள்
அறுகுளம், அகல்வயல் - வினைத்தொகைகள்
வரையா மரபு - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
கடாஅ - இசைநிறையளபெடை
கழற்கால் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
ஓங்குமலை - வினைத்தொகை
நீளிடை - வினைத்தொகை
அவிழாம் கோட்டுகிர், உண்ணா உயக்கம் - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
சாஅய் - இசைநிறை அளபெடை
தொல்கவின் - பண்புத்தொகை
பிரிந்தோர் - வினையாலனையு, பெயர்
இருந்ததோகை - பெயரெச்சம்
மருள் - உவமஉருபு
இழையணி - வினைத்தொகை
நாட - அண்மைவிளி


Download more study materials visit www.tnpsctamil.in 40 of 45.

நுந்தை - நும்தந்தை என்பதன் மரூஉ மொழி
வாழியர் - வியங்கோள் வினைமுற்று
நன்மனை - பண்புத்தொகை
அடங்காமை - எதிர்மறை தொழிற்பெயர்
ஆரிருள் - வினைத்தொகை
காக்க - வியங்கோள் வினைமுற்று
அகனினூஉங்கு - இன்னிசையளபெடை
அடங்கியான் - வினையாலணையும் பெயர்
மலையினும் - உயர்வு சிறப்பும்மை
எல்லார்க்கும் - முற்றும்மை
பணிதல் - தொழிற்பெயர்
தகைத்து - குறிப்பு வினைமுற்று
உடைத்து - குறிப்பு வினைமுற்று
எழுமை, ஐந்து - ஆகுபெயர்கள்
காவாக்கால் - எதிர்மறை வினையெச்சம்
பொருட்பயன் - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
அடங்கல் - தொழிற்பெயர்
ஆற்றுவான் - வினையாலணையும் பெயர்
உலகு - இடவாகுபெயர்
தந்தபொருள் - பெயரெச்சம்
நல்ல - பலவின்பால் வினையாலணையும் பெயர்
பெறல் - தொழிற்பெயர்
அறிவான், வாழ்வான் - வினையாலணையும் பெயர்கள்
மற்றையான் - குறிப்பு வினையாலணையும் பெயர்
பேரறிவு - பண்புத்தொகை
ஊருணி - காரணப்பெயர்
பயன்மரம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
பெருந்தகை - பண்புத்தொகை
கடனறிகாட்சி - வினைத்தொகை
ஒல்கார் - வினையாலணையும் பெயர்
இல்பருவம் - பண்புத்தொகை
ஆதல் - தொழிற்பெயர்
கேடு, கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள்
பகல்வெல்லும் - ஏழாம் வேற்றுமைத் தொகை
இகல்வெல்லும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
ஒழுகல் - தொழிற்பெயர்
தீராமை ஆர்க்கும் - எதிர்மறை வினையெச்சம்
அருவினை - பண்புத்தொகை
செயின் - வினையெச்சம்
கருதுபவர் - வினையாலணையும் பெயர்
ஒடுக்கம் - தொழிற்பெயர்
பொருநகர் - வினைத்தொகை
ஒள்ளியவர் - வினையாலணையும் பெயர்
சுமக்க - வியங்கோள் வினைமுற்று
வினைவலி, துணைவலி - ஆறாம் வேற்றுமைத் தொகைகள்
செயல் - வியங்கோள் வினைமுற்று

திருமதி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 41 of 45.

செல்வார் - வினையாலணையும் பெயர்
பெய்சாகாடு - வினைத்தொகை
சாலமிகுத்து - உரிச்சொற்றொடர்
ஈக - வியங்கோள் வினைமுற்று
ஆகாறு, போகாறு - வினைத்தொகைகள்
வாழ்க்கை - தொழிற்பெயர்
எழீஇ - சொல்லிசையளபெடை
சிறுநுதல் - அன்மொழித்தொகை
பாவை - உவமையாகு பெயர்
இலைபொழில் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
சிலைத் தொழில் - ஆறாம் வேற்றுமைத் தொகை
கருங்கொடி, இருங்கடல் - பண்புத்தொகை
கடிமிடறு - உரிச்சொற்றொடர்
கயனெடுங்கண், பவளச்செவ்வாய், எரிமலர் - உவமைத்தொகைகள்
விரிமலர் - வினைத்தொகை
கோதை - உவமையாகு பெயர்
செவ்வாய் - அன்மொழித்தொகை
ஒப்ப, அன்ன - உவமஉருபு
இன்னரம்பு, திண்டேர், இன்யாழ் - பண்புத்தொகை
புரிநரம்பு, கொள்பாடல், விடுகணை, வடிநுனி, விளங்கொளி, அடுதிரை - வினைத்தொகைகள்
வாட்படை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
கழித்த வேல், கிடந்த ஞானம் - பெயரெச்சம்
நீக்கி, உய்த்து - வினையெச்சங்கள்
நெடுங்கண் - பண்புத்தொகை
தடங்கண் - உரிச்சொல் தொடர்
கணிகை சிறுவன் - நான்காம் வேற்றுமைத் தொகை
காளை - உவம ஆகுபெயர்
வேற் கண்ணாள் - உவமத் தொகை
செழுந்துயில், குறுவளை, கொடுங்கண், வெவ்வாய், சிறுபொறி - பண்புத்தொகை
திகழ்சிரம் - வினைத்தொகை
மலைமுழை - ஏழாம் வேற்றுமைத் தொகை
மதிமுகம், மலர்த்தாள் - உவமைத்தொகை
கடிநறை - உரிச்சொற்றொடர்
துளைப்பல் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
அருமறை, செம்மலர், செழும்புகழ், வெவ்விடம், செங்கதிர் - பண்புத்தொகை
மின்னு செங்கதிர் - வினைத்தொகை
செந்தழல், வெந்தழல் - பண்புத்தொகைகள்
ஆகுக - வியங்கோள் வினைமுற்று
ஆகுக ஆகுக, கணங்கணம் - அடுக்குத்தொடர்
தீண்டன்மின் - முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று
போர்க்குறி - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடந்தொக்க தொகை
என்பவோ - ஓகாரம் வினா
கானப்பறவை - ஏழாம் உருபும் பயனும் உடன் தொக்க தொகை
வளைக்கரங்கள் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
கலகலென, குக்குவென - இரட்டைக்கிளவி
பாவியேன் - தன்மை ஒருமை வினைமுற்று

திருமுருகன் B.E


Download more study materials visit www.tnpsctamil.in 42 of 45.

பழகு பாட்டு - வினைத்தொகை
வன்காயம், வன்கானகம் - பண்புத்தொகை
மலர்க்கால் - உவமைத்தொகை
வந்துாறு, வெஞ்சிலை - பண்புத்தொகை
கடற்கலிங்கம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
பறித்தமயிர் - பெயரெச்சம்
மெல்லிதழ், மென்குரல், நுண்டுளி - பண்புத்தொகைகள்
கண்மலர் - உருவகம்
புலனருவி, அருள்மொழி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடந்தொக்க தொகை
பொழி திருமுகம் - வினைத்தொகை
அருந்தவம் - பண்புத்தொகை
தானதர்மம் - உம்மைத்தொகை
பேய்க்கணங்கள் - ஆறாம் வேற்றுமைத்தொகை
அருந்தமிழ், தண்கடல் - பண்புத்தொகை
புதுக்குநாள், பருகுநாள், பாயு நாள் - வினைத்தொகைகள்
பகர்வார் - வினையாலணையும் பெயர்
பூக்கின்ற, ஈர்க்கின்ற, காக்கின்ற - நிகழ்கால பெயரெச்சங்கள்
செங்கதிர், புல்லடிமை - பண்புத்தொகைகள்
காகிதப்பூ - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
வெண்முல்லை - பண்புத்தொகை
விடுதலை விடுதலை - அடுக்குத்தொடர்
வதிபவர் - வினையாலணையும் பெயர்
குடிகளும் மொழிகளும் இனங்களும் - எண்ணும்மை
குளுகுளுவென்று - இரட்டைக்கிளவி
பகல்பூக்கள் - ஏழாம் வேற்றுமைத் தொகை
புருவக்கொடி, மனப்பறவை - உருவகங்கள்
இணையில்லா பசுமை - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
வான்மழை - ஐந்தன் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
நமனை யஞ்சோம் - உருபு பயக்கம்
வெண்குழை, சேவடி - பண்புத்தொகைகள்
கொய்மலர் - வினைத்தொகை
கரவேல் - எதிர்மறை ஏவல் வினைமுற்று
பெய்திடாய் - ஏவல் வினைமுற்று
பெருங்குணம் - பண்புத்தொகை
பரவுவதும் - தன்மை பன்மை வினைமுற்று
நிழல் போதி - இரண்டான் உருபும் பயனும் உடன்தொக்க தொகை
யாவரும் - முற்றும்மை
வினைப்பிணி - உருவகம்

திருமுருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 43 of 45.

## இதுவரை தமிழுக்கான சாகித்திய அகாடமி விருது பெற்றவர்கள் பட்டியல் :

- 1955 - *தமிழ் இன்பம்* (கட்டுரைத் தொகுப்பு) - ரா. பி. சேதுப்பிள்ளை
- 1956 - அலை ஓசை (நாவல்) - கல்கி கிருஷ்ணமூர்த்தி
- 1957 - (விருது வழங்கப்பட வில்லை)
- 1958 - *சக்கரவர்த்தித் திருமகன்* (இராமாயணத்தின் உரைநடை) - சி. ராஜகோபாலச்சாரி
- 1959 - (விருது வழங்கப்பட வில்லை)
- 1960 - (விருது வழங்கப்பட வில்லை)
- 1961 - *அகல் விளக்கு* (நாவல்) - மு.வரதராசனார்
- 1962 - *அக்கரைச்சீமை* (பயண நூல்) - சோமு (மீ. ப. சோமசுந்தரம்)
- 1963 - *வேங்கையின் மைந்தன்* - அகிலன் (பி. வி. அகிலாண்டம்)
- 1964 - (விருது வழங்கப்பட வில்லை)
- 1965 - *ஸ்ரீ ராமானுஜர்* (வாழ்க்கை வரலாறு) - பி. ஸ்ரீ ஆச்சார்யா
- 1966 - *வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு* (வாழ்க்கை வரலாறு) - ம. பொ. சிவஞானம்
- 1967 - *வீரர் உலகம்* (இலக்கிய விமர்சனம்) - கி. வா. ஜகன்னாதன்
- 1968 - *வெள்ளைப் பறவை* (கவிதை) - அ. சீனிவாச ராகவன்
- 1969 - *பிசிராந்தையார்* (நாடகம்) - பாரதிதாசன்
- 1970 - *அன்பளிப்பு* (சிறுகதைகள்) - கு. அழகிரிசாமி
- 1971 - *சமுதாய வீதி* (நாவல்) - நா. பார்த்தசாரதி
- 1972 - *சில நேரங்களில் சில மனிதர்கள்* (நாவல்) - ஜெயகாந்தன்
- 1973 - *வேருக்கு நீர்* (நாவல்) - ராஜம் கிருஷ்ணன்
- 1974 - *திருக்குறள் நீதி இலக்கியம்* (இலக்கிய விமர்சனம்) - கே. டி. திருநாவுக்கரசு
- 1975 - *தற்கால தமிழ் இலக்கியம்* (இலக்கிய விமர்சனம்) - ஆர். தண்டாயுதம்
- 1976 - (விருது வழங்கப்பட வில்லை)
- 1977 - *குருதிப்புனல்* (நாவல்) - இந்திரா பார்த்தசாரதி
- 1978 - *புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்* (விமர்சனம்) - வல்லிக்கண்ணன்
- 1979 - *சக்தி வைத்தியம்* (சிறுகதைத் தொகுப்பு) - தி. ஜானகிராமன்
- 1980 - *சேரமான் காதலி* (நாவல்) - கண்ணதாசன்
- 1981 - *புதிய உரைநடை* (விமர்சனம்) - மா. ராமலிங்கம்
- 1982 - *மணிக்கொடி காலம்* (இலக்கிய வரலாறு) - பி. எஸ். ராமையா
- 1983 - *பாரதி - காலமும் கருத்தும்* (இலக்கிய விமர்சனம்) - தொ. மு. சிதம்பர ரகுநாதன்
- 1984 - *ஒரு காவிரியைப் போல* - லட்சுமி திரிபுரசுந்தரி
- 1985 - *கம்பன் : புதிய பார்வை* (இலக்கிய விமர்சனம்) - அ. ச. ஞானசம்பந்தன்
- 1986 - *இலக்கியத்துகாக ஒரு இயக்கம்* (இலக்கிய விமர்சனம்) - க. நா. சுப்பிரமணியம்
- 1987 - *முதலில் இரவு வரும்* (சிறுகதைத் தொகுப்பு) - ஆதவன்



Download more study materials visit www.tnpsctamil.in 44 of 45.

- 1988 - *வாழும் வள்ளுவம்* (இலக்கிய விமர்சனம்) - வா. செ. குழந்தைசாமி
- 1989 - *சிந்தாநதி* (சுயசரிதக் கட்டுரைகள்) - லா. ச. ராமாமிர்தம்
- 1990 - *வேரில் பழுத்த பலா* (நாவல்) - சு. சமுத்திரம்
- 1991 - *கோபல்ல கிராமத்து மக்கள்* (நாவல்) - கி. ராஜநாராயணன்
- 1992 - *குற்றாலக் குறிஞ்சி* (வரலாற்று நாவல்) - கோவி. மணிசேகரன்
- 1993 - *காதுகள்* (நாவல்) - எம். வி. வெங்கட்ராம்
- 1994 - *புதிய தரிசனங்கள்* (நாவல்) - பொன்னீலன் (கண்டேஸ்வர பக்தவல்சலன்)
- 1995 - *வானம் வசப்படும்* (நாவல்) - பிரபஞ்சன்
- 1996- *அப்பாவின் சிநேகிதர்* (சிறுகதைத் தொகுப்பு) - அசோகமித்ரன்
- 1997 - *சாய்வு நாற்காலி* (நாவல்) - தோப்பில் முகமது மீரான்
- 1998 - *விசாரணைக் கமிஷன்* (நாவல்) - சா. கந்தசாமி
- 1999 - *ஆலாபனை* (கவிதைகள்) - அப்துல் ரகுமான்
- 2000 - *விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள்* (விமர்சனம்) - தி. க. சிவசங்கரன்
- 2001 - *சுதந்திர தாகம்* (நாவல்) - சி. சு. செல்லப்பா
- 2002 - *ஒரு கிராமத்து நதி* (கவிதைகள்) - சிற்பி பாலசுப்ரமணியம்
- 2003 - *கள்ளிக்காட்டு இதிகாசம்* (நாவல்) - வைரமுத்து
- 2004 - *வணக்கம் வள்ளுவ* (கவிதைகள்) - ஈரோடு தமிழன்பன்
- 2005 - *கல்மரம்* (நாவல்) - ஜி. திலகவதி
- 2006 - *ஆகாயத்துக்கு அடுத்த வீடு* (கவிதைகள்) - மு.மேத்தா
- 2007 - *இலையுதிர் காலம்* (நாவல்) - நீல. பத்மநாபன்
- 2008 - *மின்சாரப்பூ* (சிறுகதைகள்) - மேலாண்மை பொன்னுசாமி
- 2009 - *கையொப்பம்* (கவிதைகள் (மொழிபெயர்ப்பு) - புவியரசு
- 2010 - *சூடிய பூ சூடற்க (சிறுகதை)* (சிறுகதைகள்) - நாஞ்சில் நாடன்
- 2011 - *காவல் கோட்டம்* (நாவல்) - சு. வெங்கடேசன்
- 2012 - *தோல் (நாவல்)* - டி. செல்வராஜ்
- 2013 - கொற்கை(புதினம்) - ஜோ டி குரூஸ்
- 2014 - அஞ்ஞாடி - பூமணி

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 45 of 45.